விலை ரூபா: 15.00

மாநகர் சபை, யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 18 வியாழக்கிழமை (02.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 195

SATS-TECH ENGINEERS




NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

## ஜாதிக ஹெலவுக்கு எச்சரிக்கை

# 13-வது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவது எனது கடமை

## அதை நிறைவேற்றுவேன் - ஜனாதிபதி சபதம்



(கொழும்பு)

"13-வது திருத்தத்தை அமுல்படுத்துவது எனது கடமை. அதை நான் நிறைவேற்றுவேன். அதன் பின்னர் ஓய்வெடுக்கவும் எதிர்பார்க்கிறேன். என் மீது நம்பிக்கை வைக்கவேண்டும்" எனவும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். இனப்பிரச்சினைக்கு 13-வது திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்தும் திட்டத்தை ஜாதிக ஹெல உறுமய தாமதப்படுத்தக்கூடாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆத்திரத்துடன் கூறியுள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலின் விலை 10 ரூபாயால் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இதன்பிரகாரம் 90 ஒக்ரைன் ரக பெற்றோல் (02ஆம் பக்கம் பார்க்க)

## 135 தனியான தடுப்பு முகாமில் 6,700 புலிகள் தடுத்து வைப்பு

படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளில் 6700 பேர் வரையில் 135 தனியான சிறப்பு தடுப்பு நிலையங்களில், தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கீழ்மட்ட உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் மட்டுமே தமது தடுப்புக் காவலில் இருப்பதாக அறிவித்திருந்த அரசு, அவர்களை மட்டுமே செஞ்சிலுவைச் சங்கம் பார்வையிட அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் விடுதலைப் புலிகளின் நீதி , நிருவாக, அரசியல் பிரிவைச் சேர்ந்த பல மூத்த உறுப்பினர்கள் மற்றும் தாக்குதல் பிரி வைச் சேர்ந்த பல மூத்த உறுப்பினர்களும் அரசினால் சிறைபிடிக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றோ, அன்றி அவர்களது விபரங்களை வெளியிடவோ அரசு மறுத்துள்ளது. (ந-5)

## அபிவிருத்திக்கான சர்வகட்சிக்குழு தமிழ்க் கூட்டமைப்புக்கு அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியினால் ஸ்தாபிக்கப்படவுள்ள சர்வ கட்சிகளை உள்ளடக்கிய அபிவிருத்தி மற்றும் ஒருமைப்பாட்டிற்கான சர்வ கட்சி குழு கூட்டத்திற்கு இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று ஜனாதிபதி செயலகத்தில் இக் குழுவின் முதலாவது கூட்டம் நடைபெறவிருக்கின்றது. தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தனித்தனி அழைப்பு நேற்று மாலை தனித்தனியாக தங்களுக்கு கிடைத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவினால் இந்த (02ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...


5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை வெட்டுப்புள்ளி இன்று வெளிவரும்

(விரிவான செய்தி 10ஆம் பக்கத்தில்)

## இலங்கையில் சிங்களவருடன் இணைந்த 'தமிழர் அரசு' தேவை

### சட்ட சபையில் தமிழக முதல்வர் கருணாநிதி



(சென்னை)

இலங்கையில் தமிழர்களை மதிக்கின்ற ஓர் அரசு அமைய வேண்டும்.எதிர்காலத்தில் தமிழர்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து ஒரு 'தமிழர் அரசை' அமைக்கும் நிலை உருவாகலாம் என்று முதல்வர் கருணாநிதி கூறினார்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் அங்கு தமிழர்களுக்கு வாழ்வுரிமை பெற்றுத் தரவும், மருந்து மற்றும் உணவுப் பொருட்கள் உட்பட அடிப்படை வசதிகளை வழங்குவது குறித்தும் விவாதிக்க சட்ட சபையில் நேற்று (14ஆம் பக்கம் பார்க்க)

## சிதம்பரத்தின் கருத்தால் அரசு கடுப்பு

## நலன்புரி முகாம் மக்கள் பற்றிய விபரம் இந்தியாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாம்

(சென்னை)

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் உள்ள மக்கள் தொடர்பாக தமது செயற்திட்டம் என்ன என்பதையிட்டு இந்திய அரசாங்கத்துக்கு உரியமுறையில் தெரியப்படுத்தப்பட்டிருந்ததாக அரசு அறிவித்துள்ளது.

புதுடில்லிக்கு அண்மையில் பயணம் செய்த இலங்கை உயர்மட்ட தூதுக்குழு, இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பான அரசின் வேலைத் திட்டம் தொடர்பாகவும், இதுவரையில் என்ன செய்யப்பட்டுள்ளது என்பதையிட்டும் இந்திய அரசுக்கு விளக்கியதாக மனித உரிமைகள் விவகார அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று 'சிரச' (14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுவர் யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சிறி அலோக் பிரசாத் எதிர்வரும் 7ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் யாழ்.அரச அதிபர் க.கணேஷை யாழ்.மாவட்ட செயலகத்தில் சந்திப்பதுடன் யாழ்.பல்கலைக்கழகம், யாழ். போதனா (02ஆம் பக்கம் பார்க்க)



ஆடித் தள்ளுபடி அதிரடிக் கழிவு
01.07.2009 தொடக்கம் மாபெரும் மலிவு விற்பனை
சில்க்சாறி, கொட்டன்சாறி, கோலம், பனாறஸ் சாறிகள், ஸ்கேட் பிளவுஸ், பஞ்சாபி, சேட், ரவுசர், சிறுவர்களுக்கான சூட் வகைகள் அனைத்தும்
40 வீதம் வரையான கழிவுடன்... இன்றே வாருங்கள்!
கணேசன் சென்ரர் கே.கே.எஸ். வீதி, இணுவில் (வைத்தியசாலைக்கு முன்பாக)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



வட மாகாணத்தின் அபிவிருத்தியில் 'இலங்கை வங்கியின் பங்கு' எனும் கருத்தரங்கு ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. இந் நிகழ்வில் பேராசிரியர் பொன் . பாலசுந்தரம்பிள்ளை, யாழ். அரச அதிபர் கே. கணேஷ் ,இலங்கை வங்கியின் தலைவர் காமினி விக்கிரமசிங்க ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்திக்கென 3 மில்லியன் ரூபாய் நிதியினை யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் எஸ். தேவநேசனிடம் இலங்கை வங்கித் தலைவர் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# மட்டு.தேசிய கல்வியியற் கல்லூரி கணிதத்திற்கு தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு தேசிய் கல்வியியற் கல்லூரிக்கு கணித பாடத்துறைக்கு மேலும் ஒரு தொகுதி மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ். கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது அனுமதிக் கடிதங்களை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதியிடம் உடன் பெற்று எதிர் வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் தம்மை பதிவு செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

கே. ஜெசிந்தா (கோண்டாவில் மேற்கு), ஆர். சுஜித்தா (சுன்னாகம் கிழக்கு), என்.சகிலா (இமையாணன் வடக்கு), கே.லக்ஷனா (பன்னாலை) கே.லக்ஷனா (கரணவாய் வட மேற்கு,கே.ருக்ஷிகா (திருநெல்வேலி), பி.துர்க்கா (கரணவாய் தெற்கு), ரி. விஜயபிரகாஷ் (கோண்டாவில் மேற்கு),பி.யாழினி (தாவடி தெற்கு), வி.வசந்துஷா(கொக்குவில் கிழக்கு), எஸ்.சபேசன் (புலோலி வட கிழக்கு), ரி.ரூபி (இணுவில் கிழக்கு), எஸ்.சஜீவன் (மட்டுவில் கிழக்கு), எஸ். சர்மிளா (கரணவாய் கிழக்கு), கே.மேரிலூக்கி (அரியாலை கிழக்கு), ரி.பிரஷாத் (யாழ்.அரசடி வீதி) (ந-5)

## சிவத்தமிழ் அன்னையின் குருபூசைத் தினம்

சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முதலாவது குருபூசைதினம் நாளை வெள்ளிக்கிழமை அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (ந-3)

# சீனாவின் முதலீட்டுக்காக தனி வலயம் ஒதுக்கீடு

ஆசியாவின் மிகப்பெரும் பொருளாதார நாடான சீனாவிடம் இருந்து மேலும் முதலீட்டைக்கவரும் முயற்சியில் இலங்கை அரசு சீன நிறுவனங்களிற்கு பிரத்தியேக வலயம் ஒன்றை வழங்கியுள்ளது.

ஹொங்காங்கில் இயங்கும் கூச்சன் முதலீட்டு கோல்டிஸ் என்ற நிறுவனம் மீரிகம பிரதேசத்தில் பொருளாதார வலயத்தை உருவாக்கும் என இலங்கையின் முதலீட்டு மேம்பாட்டு நிறுவனம் கூறியுள்ளது.

தயாரிப்பு மற்றும் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனங்கள் இந்தவலயத்தில் தமது உற்பத்தியை மேற்கொள்ளவுள்ளது. இலங்கையில் ஒரு வெளிநாட்டு நிறுவனம் இத்தகைய வசதியைப் பெறுவது இதுவே முதல் தடவையாகும். (ந-5,14)

# 3 தமிழ் எம்.பிக்களுக்கு எதிராக நடவடிக்கை

நீண்டகாலமாக நாடாளுமன்றத்திற்குச் சமுகமளிக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக தகவல் கள் வெளியாகியுள்ளன. எனினும், தமது நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறித்து தாம் ஊடகங் கள் வாயிலாகவே அறிந்துகொண்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரி வித்தார். ஆனாலும், இந்த விடயம் தொடர் பாக எதிர்வரும் 5ஆம் 6ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் கூடும்போது ஆராயப்படு மெனவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

# பெற்றோலின்...

லீற்றர் ஒன்று 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 95 ஒக்ரைன் ரக பெற்றோல் லீற்றர் ஒன்று 15 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

டீசல் லீற்றர் ஒன்றின் விலை 3ரூபாயாலும் மண்ணெண்ணெய் மற்றும் உராய் நீக்கி எண்ணெய்(ஒயில்) என்பவற்றின் விலைகள் லீற்றர் ஒன்று ஒரு ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்றிரவு அறிவித்தது.

இதேவேளை இந்தியன் எரிபொருள் நிறுவனமும்(ஐ.ஓ.சி) இதே விலையில் எரிபொருட்களினை விற்பனை செய்வதாக அறிவித்துள்ளது. (ந-5,14)

# விளையாட்டுப் போட்டிக்கு செல்லவுள்ளோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விளையாட்டுப் போட்டிக்கு செல்லவுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டாவது அணியினர் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்துக்கு இன்று மாலை 3.30 மணிக்கு பயண ஏற்பாட்டுடன் இரவு உணவும் குடிநீரும் கொண்டு வருகை தரும்படி யாழ்.மாவட்ட விளையாட்டுக் குழு அறிவித்துள்ளது. (ந-3)


## நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2009.

நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 15.07.2009-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஐஸ்கிறீம் கடைகளுக்கு மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா.10000/= ம் ஏனைய கடைகளுக்கு ரூபா.2000/=ம் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா. 300/=ம் (வற் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி நீங்கலாக) செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று விண்ணப்பப் படிவத்தினை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் 15.07.2009-ம் திகதி காலை 10.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் யாவையும் இவ் அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியில் 15.07.2009-ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்பட வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் எதிர்வரும்15.07.2009ம் திகதி பி.ப.2.00 மணிக்கு ஆணையாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். சித்தி பெற்றவர் கேள்வித் தொகையை முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

குறிப்பு: 1) கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தர கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகர சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர, வேறு கடைகள்,தனியார் காணிகளிலோ, அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடாத்தவும், விளம்பரங்கள், விளம்பர பதாகைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகிறேன்.

II)கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தர கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
01.07.2009.

மு.செ. சரவணபவ
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C-2696)


## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

சகல பகுதி நேர ஆங்கில ஆசிரியர் மற்றும் உயர்தேசிய ஆங்கில டிப்ளோமாதாரரின் நியமனம் தொடர்பாக சில முக்கிய தகவல்களை திரட்டி சமூக நலத்துறை அமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் சம்பந்தப்பட்டவர்கள் நாளை வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள உயர்கலைக் கல்லூரிக்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ந-3)

## மடு தேவாலயத்தில் திருவிழா இராணுவத்தினர் அனுமதி

(மன்னார்)

புனித மருதமடு திருத்தலத்தின் வருடாந்த திருவிழா உற்சவங்களை நடத்த இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் கோலாகலமாக புனித மருதமடு தேவாலய திருவிழா நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னி இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற பாதுகாப்பு கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, மன்னார் பிரதி பொலிஸ் மா அதிபர் எல்.ஐ.சீ.பெரேரா ஆகியோர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. மடுப் பிரதேசத்தை இராணுவத்தினர் கைப்பற்றியது முதல் நிலக் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது புனித மருதமடு பிரதேசத்தில் கண்ணி வெடி அகற் றும் பணிகள் முடிபடைந்துள்ளதாக இராணுவத்தினர் குறிப்பிட்டுள்ளனர். (ந-5)

# இந்தியத்...

வைத்தியசாலை உட்பட பல இடங்களுக்கும் விஜயம் செய்து இந்திய உதவியுடன் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வதுடன் புதிய அபிவிருத்திகளுக்கும் நிதியுதவி அளிக்கவுள்ளார் எனத் தெரிய வருகிறது. (ந-5)

# அபிவிருத்...

அழைப்பிதழ் தங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர் கட்சி யின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட அநேகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும் பிற்கு வெளியே இருப்பதால் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து முடிவெடுக்க முடியவில்லை என்றும் கூறினார். (ந-5)


ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



வித்தியா மாலை அணிதல்

✸ வித்தியா மாலை அணியும் இடங்கள் பின்வருமாறு :-
12/11 மூத்ததம்பி லேன்,மானிப்பாய்,
(இலங்கை வங்கிக்கு முன்பாக.)
03/07/2009 மாலை 3.00 மணிக்கு நடைபெறும்
04/07/2009 யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில்
பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்
05/07/2009 நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில்
12/07/2009 சங்கரவத்தை நெல்லியடி(வைரவர் கோவிலடி)
மேற்குறிப்பிட்ட இடங்களில் வித்தியா மாலை
அணிதல் நடைபெறும்.

மகாதீட்சை எடுக்க விரும்புகின்றவர்; ஆவணி மாதம் இந்தியா செல்ல இருப்பதால் தீட்சை எடுக்க விரும்பும் பக்தர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

ஏகத்துவ நிலையம்
ஸ்ரீ கல்கி ஆன்மிக மையம்
மணியர்பதி லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(C-2695)

# இன்று ஒரு தகவல்

## இளமையாக இருக்க...

வயதாகிவிடக் கூடாது என்பது தான் எல்லோரதும் ஆசை. ஆனால் அது நம்முடைய கட்டுப்பாட்டில் உள்ள விடயமல்ல...

நீண்ட காலம் இளமையாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பதற்கு என்ன வழி?

இதற்கு நிபுணர்கள் சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

முதல் விடயம் : உடம்பு குண்டாகமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அளவான உடம்போடு இருந்தால் உற்சாகமாக இருக்கலாம். உடம்பு பெருத்தால் நீரிழிவு, இதய நோய் என்பவை வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். சரி... உடம்பைக் குறைப்பது எப்படி?

சிலர் இதற்காக கலோரியைக் குறைப்பதற்கு முயற்சி செய்வார்கள். கொழுப்பைக் குறைக்க வேண்டும். அதுதான் முக்கியம். உடற் பயிற்சியும் அவசியம்.

பட்டாணி – பருப்பு – தானியவகைகள் உண்ணலாம்.

விற்றமின் E,C,A மூன்றும் அவசியம். மஞ்சள் நிறத்தில் இருக்கும். பழங்கள் மற்றும் காய்கறிகளில் பீற்றா கரோட்டின் (விற்றமின் A) உள்ளது. மாம்பழம் – பப்பாளி – கரட் – கீரை வகை தாராளமாக சாப்பிட வேண்டும்.

வயதான காலத்தில் வெயிலில் அலைவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். போதுமான தூக்கம் அவசியம்.

வயதான பின்னரும் ஆரோக்கியமாக, சந்தோஷமாக இருப்பவர்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தார்கள். அவர்களெல்லாம் சும்மா இருப்பதில்லையாம். ஏதாவது தொண்டு, தோட்ட வேலைகள் செய்பவர்களாக இருக்கிறார்களாம்.

இப்படி இருப்பவர்களுக்கு அதிகமான இரத்தம் மூளைக்குச் செல்கிறது. அவர்களை சுறுசுறுப்பாக இருக்க வைக்கிறது. புத்திக்கூர்மையாக இருப்பவர்கள் நீண்ட காலத்துக்கு ஆரோக்கியமாக இருப்பார்களாம்.

You will stay young if you think young இளமை எண்ணங்கள் உங்களை இளமையாக வாழ வைக்கும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

நாற்பது வயதானவுடன் நான் வாழ்ந்து முடித்து விட்டேன் என்று பேசிக் கொண்டிருக்கக்கூடாது.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களில் ‘இனிமேல் தான் எனக்கு வாழ்க்கையே ஆரம்பம்’ என்று சொல்பவர்களும் உண்டு.

எப்பொழுதும் இளமை எண்ணத்துடன் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். உங்களுக்கு வயதாகும் களைப்பே தெரியாது.

மூச்சை இழுத்து விடுவது நுரையீரலுக்கு நல்ல பயிற்சி. முடிந்தளவுக்கு காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுங்கள். முதுமையை வெல்ல வேண்டுமா?

சத்தான உணவு – தவறாத உடற்பயிற்சி – நல்ல மன நிலை இம்மூன்றும் அவசியம்.

ஒரு கடற்கரையில் மூன்று தாத்தாக்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்களாம்.

தங்களுடைய இளமையின் ரகசியம் என்னவென்பதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அந்த மூவரில் கொஞ்சம் இளமையாக தெரிந்த ஒருவர் சொன்னார்.

“நான் சின்ன வயதிலிருந்தே சிகரெட் குடிப்பதில்லை. அதனால் தான் இப்பொழுது நான் இப்படி இருக்க முடிகிறது” என்றார்.

“அப்படியானால் உங்களுடைய வயது என்ன?” என்று கேட்டார் மற்றவர்.

“80 முடிந்து 81 ஆரம்பம்” என்றார் அவர்.

இன்னொரு தாத்தா சொன்னார். “நான் சின்ன வயதிலிருந்தே சிகரெட்டும் குடிப்பதில்லை. மதுவும் அருந்துவதில்லை. அதனால் தான் இப்பொழுது நான் இப்படி இருக்க முடிகிறது” என்றார்.

“உங்களுடைய வயது என்ன?” என்று கேட்டார்கள்.

“90 முடிந்து 91 ஆரம்பம்” என்றார்.

கடைசியாக மூன்றாவது தாத்தா சொன்னார்.

“நான் சின்ன வயதிலிருந்தே சிகரெட் குடிப்பேன். மது அருந்துவேன் – மாமிசம் சாப்பிடுவேன். எதுவும் தள்ளுபடியில்லை. அதனால் தான் நான் இப்படி இருக்கிறேன் என்றார்.

மற்ற இருவருக்கும் ஆச்சரியம்!

“அப்படியானால் இப்பொழுது உங்கள் வயதென்ன” என்று கேட்டார்கள்.

அவர் மிகவும் நிதானமாக, “இப்பொழுது தான் 40 முடிந்து 41 ஆரம்பம்” என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பிரதிக் கல்வி அமைச்சர் சச்சிதானந்தன் தலைமையிலான குழு யாழ். விஜயம்

(கொழும்பு)

யுத்தத்தின் காரணமாக பாதிப்புற்று இடம் பெயர்ந்து யாழ்ப்பாண நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ள மாணவர்களினதும் மக்களினதும் குறையறிய பிரதிக் கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன் தலைமையிலான கல்வியமைச்சின் குழுவினர் எதிர்வரும் 09, 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளனர்.

வன்னி மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ள வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள், ஆசிரியர் தொடர்பான குறையறிந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், கல்வி தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவினால் பிரதிக் கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன் நியமிக்கப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவின் வேண்கோளுக்கிணங்க பிரதிக்கல்வி அமைச்சர் கல்வி அமைச்சின் குழுவினருடன் யாழ்ப்பாணம் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்குழு பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் தேவைகளை அறிந்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளனர்.

அதனைத் தொட ந்து யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய பாடசாலைகளுக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி, யாழ்ப் பாணம் பல்கலைக்கழகம், ஆசிரியர் கலாசாலைகள் ஆகியவற்றுக்கும் சென்று கலந்துரையாடவும் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு வடக்கின் வசந்தத்தினூடாக தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ–6)

## மூக்குக் கண்ணாடி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினரால் அராலி மக்கள் கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு கண்பரிசோதித்தவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் அராலியில் உள்ள இளைப்பாறிய ஆசிரியர் சைவப் புலவர் அ. செல்வரட்ணத்தினது இல்லத்தில் வைத்து நாளை மறுநாள் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

கண் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட மக்கள் அன்றைய தினம் கண்ணாடியினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ)

## அலுமினியம் ஒட்டும் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள அலுமினியம் ஒட்டும் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்த 18 முதல் 30 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான பயிற்சிக்காலம் 6 மாதங்கள் ஆகும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களால் தயாரிக்கப்பட்ட சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் பயிலுனர்களுக்கு நாளாந்த ஊக்குவிப்புப்படி வழங்கப்படும் எனவும் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஓ–6)



அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் தேவஸ்தான 8 ஆம் திருவிழா உபயகாரர்களினால் வன்னி துயர் துடைப்பு நிதிக்காக ஒரு தொகைப் பணம் நல்லை ஆதீன முதல்வரிடம் கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## இராசி பலன்

02.07.2009
(ஆனி 18, வியாழக்கிழமை)
தசமி முற்பகல் 9.16 மணிவரை
சுவாதி பிற்பகல் 4.19 மணிவரை
இராகுகாலம் 1.26-2.56 மணிவரை
சுபநேரம் 7.26-8.56 மணிவரை
மடுமாதா திருவிழா
அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம், தொழில் விருத்தி, தனதானிய சேர்க்கை. |
| இடபம் | செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், சத்துரு ஜெயம், நோய் குணமடைதல். |
| மிதுனம் | வியாபார விருத்தி, புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், பணக் குறைவு. |
| கடகம் | சுப செய்தி, அதிக பிரயாசை, உறவினர் சந்திப்பு, சயனசுகக் குறைவு. |
| சிங்கம் | உறவினர் சந்திப்பு, காரிய அனுகூலம், கீர்த்தி, பிரயாண நன்மை. |
| கன்னி | வீண்பகை, காரிய தாமதம், போசன சுகக்குறைவு, நிலை மாற்றம். |
| துலாம் | தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி பலிதம், உடல் நலம். |
| விருச்சிகம் | அமைதிக் குறைவு, காரிய அலைச்சல், போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | எடுத்த காரியம் கைகூடும், பெரியோர் உதவி, தனதானிய சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி. |
| மகரம் | தொழில் மேன்மை, முயற்சி கைகூடும், பெருமையடைதல், சுபநிகழ்வு. |
| கும்பம் | கட்டுப்பாடு, தந்தைவழி உறவு, முயற்சி தாமதம், தேவையற்ற பயம். |
| மீனம் | மரியாதைக் குறைவு, காரிய தடங்கல், போசன சுகம், வாகன பயம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 30 | 50 | 30 |
| உருளைக்கிழங்கு | 140 | 170 | 150 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 360 | 400 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | -- | -- | -- |
| கரட் | 80 | 100 | 100 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 25 | 35 | 20 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 40-50 | 60-80 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 100-120 | 110-140 | 90 |
| பாகற்காய் | 60 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 60 | 80 | -- |
| பயிற்றங்காய் | 40 | 50 | 30 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 |
| பீற்றூட் | 50 | 55 | 60 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 550 | 600 | 500 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 10 |
| தேசிக்காய் | 100 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 25 | 25 |

## நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம், மருதனார்மடம் விவசாய நிறுவனம் ஆகியவற்றின் 23 ஆவது நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் வைபமும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நிறுவன ஆளுநர் சபைத்தலைவர் முன்னாள் பேராயர் தென்னிந்திய திருச்சபை அருட் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் மருதனார்மடம் விவசாய நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியல் துறை விரிவுரையாளர் கலாநிதி ரவிராஜன் மற்றும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி வாசுகி ரவிராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-27)

## நூல் வெளியீடு

கலாபூஷணம் நா.புவனசுந்தரம் எழுதிய "செந்தில் முருகையா காதை" என்றநூல் வெளியீட்டு விழா வட்டு.செந்தில் முருகையா தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை 12 மணிக்கு ஆலய அறங்காவலரும் ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர் பொன்.காங்கேயநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-17)

## சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் திரைநீக்கம்

கம்பர்மலை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அதிபர் சு.கிருஷ்ணராசாவினால் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படம் திரைநீக்கம் செய்துவைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா "சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்" பற்றி உரை நிகழ்த்தவுள்ளார். (ஓ)

### யாழ்.பல்கலைக்கழக

# சித்த மருத்துவப் பிரிவின் வெள்ளிவிழா ஆரம்ப வைபவம்

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவின் வெள்ளிவிழா ஆரம்ப வைபவம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை அரங்கில் டாக்டர் சே.சிவசண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் நா.சண்முகலிங்கன் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, சித்த மருத்துவப் பிரிவின் பழைய மாணவர் வைத்திய கலாநிதி ஐ.ஜெபநாமகணேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அருட்தந்தை கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் வழங்கவுள்ளதுடன் சிறப்புரைகளை சித்த மருத்துவப் பிரிவு பேராசிரியர் சு.பவானி, சித்த மருத்துவப்பிரிவு தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஜி. கீதபொன்கலன், சித்த மருத்துவ மாணவன் செல்வன் ப.தனுராஜ் ஆகியோர் வழங்கவுள்ளதுடன் பிற்பகல் ஒரு மணிக்கு பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

### யாழ்.மாவட்டத்தில் இருந்து

# கலைப் பெறுமதி மிக்க பொருட்களை வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லல்

(யாழ்ப்பாணம்)


தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி யாழ்.மாவட்டத்தில் உள்ள கலைப் பெறுமதியுள்ள பொருட்களைக் கொள்வனவு செய்து தென்பகுதிக்கு விற்பனைக்காகக் கொண்டு செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஆலயங்களில் வைக்கப்பட்டுள்ள பழைய வாகனங்கள், பெறுமதி வாய்ந்த மரத் தளபாடங்கள், பழைய பெட்டகங்கள், பெட்டிகள் இவ்வாறு கொண்டு செல்லப்படுவது இயன்றளவு தவிர்த்துக்கொள்ளல் வேண்டும் எனத் தெரிவித்துக் கொள்வதுடன், இதற்குரிய அனுமதிகளை சிபார்சு செய்யும் பிரதேச செயலர்கள் அவற்றை நேரடியாகப் பார்வையிட்டு பெறுமதிமிக்க பொருட்களாயின் அவற்றைக் கொண்டு செல்வதற்குரிய அனுமதியை வழங்குவதில் மிகவும் அவதானமாக இருக்குமாறும், சிற்ப ஆலயங்களில் செய்யப்படும் பொருட்களாக இருந்தால் அவை புதிதாக இருப்பின் அவற்றையும் நேரடியாகப் பார்வையிட்டு அதன் பின் மாத்திரம் அனுமதியை வழங்குமாறும் யாழ்.அரச அதிபர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வித்தியாலய முன்னாள் அதிபர் செ.சிவநடராசா ஆசியுரை வழங்குவதையும், நிகழ்வில் இடம்பெற்ற கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

# யாழ்.மாநகரசபை அதிகாரத்தை கைப்பற்றினால் யாழ்ப்பாணம் சிங்கப்பூராக மாற்றப்படும்

## சுயேட்சைக்குழு முதன்மை வேட்பாளர் சுபியான் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை அதிகாரத்தை சுயேட்சைக்குழு -1 கைப்பற்றினால் யாழ்ப்பாணம் சிங்கப்பூர் நகரத்திற்கு சமமான ஓர் நவீன நகரமாக மாற்றப்படும் என சுயேட்சைக்குழு-1 இன் முதன்மை வேட்பாளர் மௌலவி சுபியான் தெரிவித்துள்ளார்.

சோனகதெரு, நாவாந்துறை அருகில் அவரது அரசியல் கட்சி அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஒரு காலத்தில் யாழ்.மாநகரம் சிங்கப்பூர் நகரத்திற்கு சமமான நகரமாக தோற்றம் பெற்றுக் காணப்பட்டது. இடையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக அபிவிருத்திப் பணிக்கு குந்தகம் விளைவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பின்நோக்கி தள்ளப்பட்டுள்ள மாவட்டமாக அமைந்துள்ளது.

தென்பகுதியில் உள்ள குக்கிராமங்கள் கூட அதிநவீனமாக்கப்பட்டு வளர்ச்சியடைந்து காணப்படுகின்ற இந்நிலையில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட கிராமங்கள் அடிப்படை வசதியின்றி முடக்கப்பட்டு பின்தங்கிய நிலையிலே காணப்படுகின்றது.

21 ஆம் நூற்றாண்டில் நவீனத்துவம் வாய்ந்த மாநகரமாக யாழ்.மாநகரத்தைக் கட்டியெழுப்புவது எமது கட்சியின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. இதற்காக மக்களுடைய ஆதரவைப் பெற்று மக்களுக்காக பணியாற்ற முன்வந்துள்ளோம்.

இதன் அடிப்படையில் யாழ்.மாநகர அபிவிருத்தியின் கீழ் யாழ்ப்பாண நவீன சந்தையைப் புனரமைத்து நவீன மயமாக்கல், சுகாதார அபிவிருத்தி, வீதி அபிவிருத்தியை மேற்கொண்டு போக்குவரத்து வலைப்பின்னலை உருவாக்கல், வடிகால் அபிவிருத்தி, மேலைத்தேய நகரங்களைப் போன்று யாழ். நகர பஸ் நிலையத்தை தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையமாக புனரமைத்தல், உல்லாசப் பயணிகளின் வருகையை யாழ்ப்பாணம் நோக்கி நகரவைத்து அந்நியச் செலாவணியை அதிகரிப்பதுடன் வேலையற்று காணப்படும் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப் பைப் பெற்றுக் கொடுத்தல், புதி தாக நவீன சந்தை களை உருவா க்கி மக்களின் நுகர்வுத் தேவைகளை பூர்த்தியடையச் செய்தல், யாழ்ப்பாண மியூசியத்தை புனரமைத்து தொல்பொருள் ஆராய்ச்சியை ஊக்குவித்தல், துரையப்பா விளையாட்டரங்கை சர்வதேச விளையாட்டரங்காக நவீனப்படுத்தல்,

சுப்பிரமணியம் பூங்காவை உலக புகழ் பெற்ற பூங்காவாக மாற்றமடையச் செய்தல், சிறுவர் முன்பள்ளி மேம்பாட்டுத்திட்டங்களை மேலோங்கச் செய்தல், குப்பை கூழங்களை பசளையாக்கும் செயற்திட்டம் போன்றவற்றை முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஓ-7)

## ஞானச்சுடர் ஆனிமாத இதழ் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வரும் ஞானச்சுடர் மலரின் ஆனிமாத மலர் வெளிவந்துள்ளது. (ஓ-4)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு ஆலயப் பூசையைத் தொடர்ந்து "இதிகாசங்கள்" என்னும் விடயத்தில் பொன் சுகந்தன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-4-35)

✠✠✠

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை 10.30 மணியளவில் "ஆறுமுகமும் அலங்காரமும்" என் னும் விடயம் பற்றி வலி.மேற்கு பிரதேசபை நிர்வாக உத்தியோகத்தர் த.பால சுப்பிரமணியம் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-35)

### யாழ்.செய்திகள்

## கடன் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி வடகிழக்கு மாதர் அபிவிருத்தி சங்க தொழில்சார் கடன் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கம்பர்மலை பாரதி சனசமூக நிலைய முன்றலில் மாதர் அபிவிருத்திச் சங்க தலைவர் செல்வி நா.பகவதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச சபை சனசமூக சேவை உத்தியோகத்தர் சுப்பிரமணியம், கரவெட்டி பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.உமாபாலன், கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தை சேர்ந்த என்.தவராஜகுமார் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக உடுப்பிட்டி வடக்கு கிராம அலுவலர் கே.சந்திரமோகன், வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

## வடமராட்சி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டிகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் மற்றும் 5 ஆம் திகதியும் வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு தமிழறிவு வினாவிடை போட்டியும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தனிநடனம், பிரிவு II,III,IV,V, நடனம் குழு I, குழு II, இசையும் அசையும், இசை தனி I,II,III, IV, வாசிப்பு பிரிவு I,II, ஆக்கத்திறன், கதைகூறல், விவாதம் ஆகியனவும் இடம்பெறவுள்ளது.

மேலும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இசை குழு I, குழு II, நாட்டார் பாடல், பேச்சு பிரிவு I,II,III,IV,V, பாவோதல் பிரிவுI,II,III,IV,V, வில்லுப்பாட்டு, நாடகம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

மேலும் இந்நிகழ்வில் நடுவர்களாக அழைக்கப்பட்டவர்களை தவறாது சமூகம் தந்து போட்டி நிகழ்வுகள் குறித்த நேரத்தில் நடைபெறுவதற்கு முழு ஆதரவையும் தந்து ஒத்துழைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

# மரண அறிவித்தல்கள்

## தம்பிராசா வேலாயுதபிள்ளை



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் , வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா வேலாயுதபிள்ளை கடந்த திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் தம்பிராசா–வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் , கமலாதேவியின் அன்புக்கணவரும் , கபிலன் (மாணவன், யாழ். மத்திய கல்லூரி) , குகன் (மாணவன் யா/ அத்தியார் இந்துக் கல்லூரி) , பவிதாசன் (மாணவன் , நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் , கந்தசாமி–மகேஸ்வரி தம்பதியினரின் அன்புமருமகனும் , அன்னம்மா , நடராசா , தங்கம்மா , பரமேஸ்வரி , பிறைசூடி , ஜெயகௌரி ஆகியோரின் சகோதரனும் , சேகர் , கௌரிதேவி சுமதி (ஆசிரியர் , யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 01.07.2009 புதன்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு ,*
*நீர்வேலி.*

*தகவல்*
*குடும்பத்தினர்.*

## சின்னத்தம்பி சுப்பிரமணியம்



மூளாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் 28.06.2009 ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி –இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் , ஈஸ்வரியின் பாசமிகு கணவரும், சற்குணராசா (டோகா), சற்குணதேவி (அமரர்), விக்னராசா (அமரர்), விக்னேஸ்வரி , வசந்தாதேவி, சுதந்தாதேவி (ஆசிரியர், யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேசவித்தியாலயம்)ஆகியோரின் அன்புத்தந்தையும், விமலசோதி, உதயகலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கேசவன், சிறிமீரா, ரஜிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.07.2009 வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் மேற்கு ,*
*சுழிபுரம்.*

*தகவல்*
*குடும்பத்தினர்.*

## நடேஸ்வரராஜன் தயாநிதி (தயா)

அரியாலை , 41/6 இரந்தைக்குளம் வீதியை வசிப்பிடமாகக்கொண்ட நடேஸ்வரராஜன் தயாநிதி 30.06.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கனகரத்தினம் –தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், நடடேஸ்வரராஜனின் (ஈசன்) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*41/6 இளந்தைக்குளம் வீதி,*
*அரியாலை.*

*தகவல்*
*நடேஸ்வரராஜன் (கணவர்)*

## திருமதி காராளசிங்கம் ஞானசௌந்தரி

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் , வசிப்பிடமாகவும் தற்போது நல்லூரில் வசித்தவருமாகிய திருமதி காராளசிங்கம் ஞானசௌந்தரி 30.06.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு .திருமதி நாகநாதபிள்ளை தம்பதியினரின் அன்புமகளும் , காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கனகசபை தம்பதியினரின் அன்பு மருமகளும் , காலஞ்சென்ற காராளசிங்கத்தின் அன்பு மனைவியும் , காலஞ்சென்றவர்களான கந்தஞானி மாஸ்ரர் , ராசம்மா, தங்கம்மா சீதேவிப்பிள்ளை , நல்லம்மா மற்றும் சிவஞானம் , (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் , வரதலட்சுமி ஜெயபாலன் (கனடா) சிறிபாலன் (கனடா), விஜயா, (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் , மகாலிங்கம், ஆம்பல் (கனடா), கிருபாலினி (கனடா), சண்முகானந்தராஜா (UK ) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.06.2009 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ். கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கா.த.மகாலிங்கம்*
*இலக்கம் 37/4 , வைமன் வீதி,*
*நல்லூர் ,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்*
*குடும்பத்தினர்.*

## ஆங்கிலப் பயிற்சி செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆங்கில பாட ஆசிரியர்கள் அல்லாத ஆசிரியர்களுக்கான ஆங்கில பயிற்சி செயலமர்வு எதிர்வரும் 4, 5, 6ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் நடைபெறும் என்று வலயக்கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள் ளார்.

இவர்களுக்கு ஏற்கனவே முதல் கட்டப்பயிற்சிகள் வழங்கப்பட்டதாகவும் அதன் தொடர்ச்சியான பயிற்சியே வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஓ–29)

## யாழ்ப்பாணக்கல்லூரியின் பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி குவாட்ராங்கில் வளாகத்தில் அதிபர் நோயல் விமலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதவான் ஆர்.ரி.விக்னராஜா யாழ்.பல்கலைக்கழக ஆங்கில பாட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தகுமாரி விக்னராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் கல்வி, விளையாட்டுத்துறைகளில் சாதனை நிகழ்த்திய மாணவ மாணவிகளுக்கு தங்கம் , வெள்ளி பதக்கங்கள் மற்றும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (ஓ–4–27)

## கும்பாபிஷேகமும் சங்காபிஷேகமும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி –வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான சங்காபிஷேகமும் ஸ்ரீ மகாகாளி அம்பாள் கும்பாபிஷேகமும் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் மகாகாளியம்பாள் கும்பாபிஷேகத்தை முன்னிட்ட பூர்வாங்கக்கிரியைகள் நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெறுகிறது.

இன்று வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிவரை ஸ்ரீ மகா காளியம்பாளுக்கு எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். மறுநாள் சனிக்கிழமை அதிகாலை 5.55மணிக்கு நூதன கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

அன்று காலை 7 மணி முதல் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு சங்காபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து விசேட பூசைகளுடன் அம்பாள் திருவீதி உலா வருதலும் இடம்பெறவுள்ளது. (ஓ–4–29)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு திருவருள் மிகு குருநாத சுவாமி ஆலயத்தின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்ட மணவாளக் கோல உற்சவம் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 11 தினங்கள் அலங்கார உற்சவமாக நடைபெறவுள்ளது.


இதில் வியாழக்கிழமை காலை 8 மணி முதல் சங்காபிஷேகம், பூசை, திருவிழாக்கள் இடம்பெற்று மறுநாள் வெள்ளிக்கிழமை முதல் தினமும் மாலை 3 மணிக்கு அபிஷேகமும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பிறப்பு, கார்த்திகை ஷண்முகர் அபிஷேகம், ஷண்முகார்ச்சனை, அருள் நடனபவனி , தண்டிகைத் திருவிழா என்பன நடைபெறவுள்ளது.

மேலும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை அபிஷேகம், ஊஞ்சல், தீர்த்தவாரி என்பனவும் இடம்பெறவுள்ளது. (ஓ–4)

# மரண அறிவித்தல்கள்

## நடராசா கனகரத்தினம்

(ஸ்தாபகர் கஜன்குறூப் ,திருநெல்வேலி ,
முன்னாள் பெருந்தோட்ட
மேற்பார்வையாளர் தலவாக்கொல்லை,
(Founder of ANVIL )



ஆடியபாதம் வீதி அரசடி அம்மன் கோயிலடி திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் , வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கனகரத்தினம் 30.06.2009 செவ்வாய்க்கிழமை காலமாகி விட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், சுதாகர், கண்ணன் காலஞ்சென்ற சந்தர் மற்றும் கவிதா , கதீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நாகேஸ்வரியின் பாசமிகு மாமனாரும், கனகலிங்கம் , சோமசேகரம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை –தங்கம்மா தம்பதியினரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 01.07.2009 புதன்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'The Nest ' Arasady Amman Kovily view,
Adiyapatham Road, Thirunelvely.

*தகவல்*
*குடும்பத்தினர்*

## கந்தையா தனகேஸ்வரி



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் , சோடாக் கம்பனி ஒழுங்கை மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனகேஸ்வரி 30.06.2009 செவ்வாய்க்கிழமை காலமாகி விட் டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் , காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி அரியநாயகத்தின் அன்புச் சகோதரியும், பஞ்சனாதேவியின் அன்புத் தாயாரும், மனோரஞ்சிதனின் (சிமெந்து கூட்டுத்தாபனம், லஷ்சுமி போட்டோ , சுன்னாகம்) அன்பு மாமியாரும் லதாங்கினியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.07.2009) புதன்கிழமை மு.ப.11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று ,பூதவுடல் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்பட்டது . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

*சோடாக் கம்பனி ஒழுங்கை,*
*மல்லாகம்.*

*தகவல்*
*மனோரஞ்சிதன் (மருமகன்)*

## திரும்தி தவேந்திரன் தவமணி (மணி)



தாவளை, இயற்றாலை , வரணியைப் பிறப்பிடமாகவும் , பருத்தித்துறைவீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் ,வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தவேந்திரன் தவமணி (மணி) 29.06.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை தவேந்திரனின் (வைரமுத்து) அன்பு மனைவியும், தர்மினி (சுதா), ரஜினிகாந் (கண்ணன்–நோர்வே), சுதாஸ்கரன் (பிரபா) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பருத்தித்துறை வீதி,*
*எருவன் ,கொடிகாமம்*

*தகவல்*
*சுதாஸ் (பிரபா)*
*மகன்.*

*தொ.பே. 0773570833*

## கார்த்தி யோசேப்

(ஓய்வுபெற்ற பரிசாரகர் ,யாழ்.வைத்தியசாலை)

கொத்தியவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் மல்வம், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தியோசேப் 30.6.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.



அன்னார் அக்கினேசின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செலஸ்ரீனா மற்றும் சசிகுமார் (பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் அன்பு தந்தையும் கதிரமலை (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்), சிவாஜினி ஆகியோரின் மாமனாரும், மனோராஜ், சசில்டா, டிலக்ரீனா ஆகியோரின் பேரனும், மனோன்மணி, பூபாலசிங்கம், பூமணி ஆகியோரின் சகோதரனும், மேரிஅலிஸ், மரியராஜேஸ்வரி, ஜசிந்தாமலர், அமலோபவம், பற்றிமாநாயகி, அன்ரன்ராசா அன்ரன்புஸ்பராஜா (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நேற்று (1.07.2009) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் நடைபெற்று மல்வம் திருக்குடும்ப மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மல்வம்,*
*உடுவில்.*

*தகவல்*
*சசிகுமார் (மகன்)*

# மணிபல்லவத்தில் அமுதசுரபி

நயினாதீவு பண்டைக் காலத்தில் "மணிபல்லவம்" என்றும் அழைக்கப்பட்டது. "மணிமேகலை" என்னும் தமிழ்க் காப்பியத்தில் வரும் "மணிபல்லவத்தீவு" நயினாதீவே என்பது அறிஞர் பலரின் கருத்தாகவுள்ளது. ''அமுதசுரபி'' என்பது அள்ள, அள்ள அமுது குறைவுறாத ஓர் அட்சய பாத்திரமாகும். மணிபல்லவத்தில் ''அமுதசுரபி'' எனும் அட்சயபாத்திரம் விளங்கிய மாட்சியை, "மணிமேகலை" எனும் செந்தமிழ்க் காப்பியம் சிறப்பாகச் சித்திரிக்கின்றது.



நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் ஆரம்பிக்கப் பெற்ற ''நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை'', "அமுதசுரபி'' என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தையும், சக்தி பீடங்களின் பெயர்கள் பொறித்த முப்பத்தி மூன்று அறைகளைக் கொண்ட ''அமுதசுரபி இறைபணிகள் இல்லத்தையும்" கொண்டு திகழ்கின்றது.

மணிபல்லவத்திற்கு அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரம் வந்த வரலாற்றையும், அமுதசுரபி என்னும் பெயர் பூண்டு நயினையில் நடைபெறும் அமுதூட்டும் பண்பாட்டு பாரம்பரியத்தையும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் பொன்விழா நாளில் புலப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

### ஸ்ரீ நாகபூஷணி ஆலயத்தில் நித்திய அன்னதானம்

நாள்தோறும் நயினை அம்பாள் ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்களுக்கு அமுதூட்டும் அன்னபூரணியாக நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திகழ்கின்றாள். சென்ற நூற்றாண்டில் நயினை ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமியாரின் அருளாசியுடன் நயினை அம்பாள் ஆலயத்தைச் சூழ்ந்திருந்த மடங்களில் அமுதூட்டும் பணி நடைபெற்றது.

ஆலயத்தைச் சுற்றியிருந்த காசிப்பிள்ளை அன்னதான மடம், அன்னப்பிள்ளை அன்னதான மடம், கதிரமலை அன்னதானமடம் ஆகிய மடங்களில் அன்னதானம் நடைபெற்ற போதும், காலப்போக்கில் அவற்றின் அமுதூட்டும் பணி நின்றுவிட்டது.

இன்று இலங்கையில் தினந்தோறும் அன்னதானம் நடைபெறும் சிறப்புமிகு திருத்தலமாக நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயத்தில் 1998 ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் நடைபெற்ற மகாகும்பாபிஷேக நாள் தொடக்கம், இன்றுவரை தினந்தோறும் நித்திய அன்னதான அறப்பணி மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. ஒரே தடவையில் 5 ஆயிரம் ரூபா செலுத்தி இந்த அமுதூட்டும் நித்திய அன்னதானத்தில் பலர் இணைந்துள்ளனர். இலங்கையில் தினந்தோறும் அம்பிகை அடியார்களுக்கு அமுதூட்டும் "நித்திய அமுதசுரபியாக'' நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குவது பெருமைக்குரியது.

### அன்னதான சபையும் அமுதசுரபியும்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி முப்பத்து மூன்று அறைகள் கொண்ட ஓர் "அமுதசுரபி இறைபயணிகள் இல்லம்'' அமைக்கப்பட்டுள்ளது. நயினாதீவுக்கு வரும் யாத்திரீகர்கள் இந்த இறை பயணிகள் இல்லத்தில் தங்கியிருந்து ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைத் தரிசித்து வருகின்றனர். இந்த இறைப் பயணிகள் இல்லத்தில் அமைந்துள்ள அறைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சக்தி பீடப் பெயரில் அமைக்கப்பட்டிருப்பது இலங்கையில் வேறெங்கும் காணமுடியாத திருவருள் வெளிப்பாடாக விளங்குகின்றது.

அமுதசுரபி நூலகத்தில் அரிய நூல்கள் பல உள்ளன. அமுதசுரபி அன்னதான சபையினர் நூல்களை வெளியிடும் அறப்பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். இச்சபையினரால் வெளியிடப்பட்ட நயினாதீவு சி. ஆ.க. கதிரித்தம்பி என்பவர் எழுதிய "ஆபுத்திரனும் அமுதசுரபியும்'' எனும் நூல், "மணிபல்லவம்" எனும் நயினாதீவு பற்றி அறிவதற்கு ஓர் அரிய பொக்கிசமாக விளங்குகின்றது. இச் சபையினர் வெளியிடும் பொன்விழா மலரும் இத்தகையதோர் அமுத களஞ்சியமாகும்.

## இன்று அமுதசுரபி அன்னதான சபையின் பொன்விழாவும் மலர் வெளியீடும்

அம்பாளை ஆண்டு தோறும் ஆனித்திங்களில் நடைபெறும் மஹோற்சவ காலத்தில் தரிசிக்க வரும் பல்லாயிரக்கணக்கான அடியவர்களுக்கு பசிப்பிணி நீக்கும் உயரிய நோக்குடன் இருபத்தைந்து அன்னதான அறப்பணித் தொண்டர்களால் 1960.06.15 இல் ஆரம்பிக்கப்பட்ட நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதான சபை 1968 ஆம் ஆண்டு முதல் ''நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை'' எனும் பெயரில் வளர்ந்து சிறந்து இன்று பொன்விழாக் கொண்டாடுகின்றது.

1968 இல் இந்தியாவில் இருந்து நயினா தீவுக்கு வருகை தந்த தமிழ் அறிஞர் கி. வா. ஜகந்நாதன் என்பவரே "அமுதசுரபி'' எனும் அமுத மொழியால் இவ் அன்னதான சபையை அழைத்த பெருமைக்குரியவராவார்.

### அமுதசுரபியின் ஆரம்ப காலம்

பொன்விழா நிகழும் இப்புனித ஆண்டில் அதன் ஆரம்ப கர்த்தாக்கள் 25 பேர் இணைந்து 1960 களில் அமுதசுரபியின் அன்னதான பணியை நயினையில் ஆரம்பித்தனர்.

இவர்களுள் வே. க.தம்பிமுத்து, நா. காராளபிள்ளை, மு. சண்முகராசா என்ற மூவரும் அன்னதான சபையின் பொன் விழாக்காணும் பேறு பெற்றுள்ளனர். ஆரம்பத்தில் அமுதசுரபி அன்னதான சபை எத்தனையோ இடர்களைத் தாண்டியே வளர வேண் டியதாயிருந்தது.

### அமுதசுரபியின் அறப்பணிகள்

நயினை அமுதசுரபி அன்னதான சபையின் அறப்பணிகள் பலவாகப் பரிணமித்துள்ளன.

2003. 03.28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அறநெறிப் பாடசாலை இன்று நயினை சிறுவர்களுக்கு சிறந்த முறையில் அறநெறிக் கல்விப் பணிபுரியும் அமுதசுரபியாக மிளிர்கின்றது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் ஆரம்ப கர்த்தாக்களைக் கௌரவிக்கும் நோக்குடன் 05.07. 2006 இல்

### அமுதசுரபியின் பொன்விழா நினைவுச் சின்னம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் ''அமலனுக்கு அமுதளித்த ஆதி நாயகி அன்பர்களுக்கு உணவளிக்கும் அன்னபூரணி" என்ற மகுட வாசகத்தைப் புலப்படுத்தும் அழகான அரிய சிற் பங்கள் அமுதசுரபி அன்னதான சபையின் நுழைவாயிலின் கிழக்குப் பக்கமாகவுள்ள பிரதான வீதியில் உயர்ந்து வளைந்து விளங்கும் தோரணவாயின் இரு பக்கங்களிலும் அமைக்கப்பட்டிருப்பது நயினைக்குப் பெருமை சேர்ப்பதாகவுள்ளது.

அமலனுக்கு அமுதூட்டுவதைக் காட்டும் இத்தோரணவாயில், அமுதசுரபி அன்னதான சபையின் பொன்விழாவின் நினைவுச் சின்னமாக என்றும் நின்று நிலைத்து நிற்கும் சிறப்புக்குரியது.

மேலும் அமுதசுரபி மணி மண்டபத்தின் இருக்கைப் பகுதி சொப்பமிடப்பட்டு அதன் கிழக்கு மற்றும் மேற்குப் புறச் சுவர்களில் பெரிய புராணத்தில் அமுதூட்டுதல் பற்றி வரும் பாடல்களும் பொன்விழாக் காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றைச் சிந்தித்துச் செயற்படுத்தியவர்கள் அனைவருக்கும் அம்பிகையின் திருவருள் கிடைக்கும்.

டாக்டர் மா. வேதநாதன் M.A., Ph.D.,
தலைவர், இந்து நாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

### நிறைவுரை

சுமார் ஆயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆபுத்திரன் மற்றும் மணி மேகலை என்போரின் கைகளில் அமுதூட்டும் அட்சய பாத்திரமாக விளங்கிய "அமுத சுரபி'' கடந்த அரை நூற்றாண்டு காலமாக "நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை" என்ற பெயரில் நயினாதீவு என்னும் மணிபல்லவத்தில் விளங்குவது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் தனிப் பெரும் திருவருளே ஆகும்.

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று மஞ்சத் திருவிழா

### கருணை மழை பொழிவாய்

அழகிய மஞ்சந்தனிலே
மஞ்சள் நிற சேலை கட்டி
மங்களமாய் காட்சி தந்து
மக்களின் மனங்களில் குடி கொண்டவளே
உன் அருள் பெற்று பக்தர் நாம் உய்த்திட
நின் கருணை மழை பொழிய வேண்டும் அம்மா...!

ம. நிரோசனா
கோப்பாய்.

### மஞ்சத்தில் வாரீர் அம்மா!

எழுகின்ற இளம்பரிதிக் கதிர்கள் உந்தன்
இதயத்தின் இயக்கத்தில் இயக்கம் பெற்று
விழுகின்ற பரப்பெல்லாம் விளக்கம் காட்ட
விழுப்பொருள்நின் அளப்பரிய விம்பம் கண்டு
தொழுகின்றோம் அம்மம்மா எங்கள் வாழ்வின்
தோற்றமுமாய் முடிவுமாய் (த்) துணையாய் நின்றாய்
அழுகின்றோம் ஆனந்தக் கண்ணீர் ஊடே
அம்பாளே மஞ்சத்தில் வாரீரம்மா!

நயினை கவிஞர்
நா.க.சண்முகநாத பிள்ளை

### குஞ்சம் நஞ்சம் பூ அம்மாளே

தஞ்சம் துஞ்சல் இல்இல்
வஞ்சம் பஞ்சம் இல்இல்
இலஞ்சம் கஞ்சம் இல்இல்
நெஞ்சம் தஞ்சம் உன்னில்
மஞ்சம் விஞ்சும் எம்மில்
குஞ்சம் நஞ்சம் பூ அம்மாளே

டாக்டர் சி. யமுனானந்தா

### மஞ்சத்தில் தொழுவார் வினைமாயுமே

நஞ்சினில் நலிந்த தேவரெலாம்
தஞ்செனச் சங்கரன் தாள்புக
அஞ்சா தமுது செய தடுத்தவன்னையை
மஞ்சத்தில் தொழுவார் வினைமாயுமே

சிவ. சண்முகவடிவேல்

### எழிலார் வாழ்வு வரும்

நாகபூஷணி பதங்கள் நாடித் தொழுதிடவே
போகும் வல்வினைகள் புறத்தே – ஆகுநல்
எண்ணம் கைகூடி எழிலார் வாழ்வு வரும்
திண்ணமிது என்று நீ தேர்

பத்தினிமைந்தன்

### நற்கதி தருவாய் நாயகியே

கற்பகமே என்றும் எமக்கு
கருணை புரிந்திடுவாய் – உன்
பொற்பதம் பற்றினோம் புதுமை தனைப்
புரிந்திடுவாய்
நற்கதி நல்கிடுவாய் நயினை நாயகியே
என நம்பி வந்தோம் உன் வாசலுக்கு – நாம்
தற்பெருமை தவிர்த்து வாழ்ந்திடவே – உன்னை
தலை சாய்த்துத் துதிக்கின்றோம்.

எஸ்.கே. மனோகரன்
சுன்னாகம்.

S.A. Chandrabavan (Publisher & Teacher) 077-3013062

# புலமைப் புலரி பப்ளிகேஷன் -கொழும்பு

மாணவர்களைபாடசாலைக்குத்தேர்ந்தெடுப்பதற்கும் ,மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம் 05 மாணவர்களுக்கு வழங்கப்படும்

# மாதிரிப் பரீட்சை -2009

நேரம் :-1மணி 15 நிமிடம்
வினாப்பத்திரம் (2)
பெற்ற புள்ளி (   )

பரீட்சை இலக்கம் 06

எஸ்.ஏ.சந்திரபவன்

இரவு பகலும் எதற்கு ? - மனம்
இன்பம் துன்பம் உணர
மேடு பள்ளம் எதற்கு? வாழ்வில்
ஏற்றத் தாழ்வு உணர
காயும் கனியும் எதற்கு? சொல்லில்
கசப்பும் இனிப்பும் உணர
வெயிலும் மழையும் எதற்கு? - உள்ளக்
கடுமை அன்பு உணர
பூவும் பிஞ்சும் எதற்கு? வாழ்வின்
புதுமை இளமை உணர

01.மேலுள்ள கவிதையை வாசித்து. அது தொடர்பான கீழ்வரும் வினாக்களும் விடை தருக.

1.மனம் என்பதன் ஒத்த சொல் ஒன்று தருக.
(------------------------------------)

2.பாடலில் உள்ள இணைமொழித் தொடர் ஒன்றை எழுதுக.
(------------------------------------)

3.இனிப்பு என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.
(------------------------------------)

4.வெயிலும் மழையும் ஏற்படுவதன் மூலம் எதனை உணர்ந்து கொள்ள முடிகிறது?
(------------------------------------)

5.'பூவும்' என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக.
(------------------------------------)

6. ஏற்றத்தாழ்வு என்பதனை பிரித்தொழுதுக.
(-------------------------- + --------------------)

7.இன்பம் + துன்பம் என்பதனை சேர்ந்தெழுதுக.
(------------------------------------)

❖கீழே கூட்டில் உள்ள இரட்டைச் சொற்றொடர்களை வாக்கியங்களின் இடைவெளிகளில் பொருத்தமாக வைத்து நிரப்புக.

| இரவும் பகலும் / பூவும் பிஞ்சும் / வெயிலும் மழையும்/ மேடு பள்ளம் |
|---|

8. நிமலன்------------------------------ என செழித்து வளர்ந்திருந்த மிளகாய்ச் செடியை வெட்டி எறிந்தான்.

9.வாழ்க்கை எனும் பாதையில் -------------------------- வருவது இயல்பானது

10.------------------------------------ இயற்கையின் பருவ மாற்றங்களாகும். என ஆசிரியர் கூறினார்.

(10 புள்ளிகள்)

02)கீழ்வரும் அறிவித்தலை வாசித்து , அது தொடர்பான வினாக்களுக்கு விடை தருக.

| நாளை மறுதினம் (29.04.2009) எமது பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலையின் பொன்விழா கொண்டாடப்படுகின்றது. இவ்விழா காலை 9 மணி 01 நிமிடத்திற்கு அதிபர் திரு. திருச்செந்தூரன் தலைமையில் ஆரம்ப மாகின்றது. |
|---|

1.. இவ்வறிவித்தல் வழங்கப்பட்ட திகதி யாதாக இருக்கும்.
(------------------------------------)

2. பாடசாலை ஆரம்பித்து எத்தனை வருடங்கள் நிறைவடைந்திருக்கின்றன?
(------------------------------------)

3.பொன்விழா நிகழ்வு நடக்கும் இடம் யாது?
(------------------------------------)

4. பாடசாலை அதிபரின் பெயரை திருத்தமாக எழுதுக.
(------------------------------------)

5. நாளை மறுதினம் புதன் கிழமை எனில், அறிவித்தல் வழங்கப்பட்ட கிழமை யாது?
(------------------------------------)

(5 புள்ளிகள்)

03.| ல | ள | ழ | ஆகிய எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை அறிந்து,கீழுள்ள வாக்கியங்களின் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை கீழேயுள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

1.இன்று புதன் ------------------------------ ஆகும்
(கிலமை / கிழமை / கிளமை)

2.தாகத்திற்கு ------------------------------ சிறந்த பானமாகும்.
(இலநீர் / இழநீர் / இளநீர்)

3.யானை -------------------------- மிக்க ஓர் மிருகமாகும்.
(பலம் / பழம் / பளம்)

(3 புள்ளிகள்)

04.கீழுள்ள ஒவ்வொரு வினாவினதும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1.மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கும் எமக்குள்ள சமநிலைத் தன்மையை ஏற்படுத்துவதற்கும் பொதுத்தமான செயற்பாடு பின்வருவனவற்றுள் எது?

1.கராத்தே பயிற்சி எடுத்தல்
2. தியானம் செய்தல்
3.அதிக நேரம் தூங்குதல்

2.ஒவ்வொரு நாளும் வகுப்பறையில் பாடங்களை படிப்பதற்குத் தொடங்கும் முன் செய்யக்கூடிய செயற்பாடு யாது?
1.ஏதாவது ஒரு பிரச்சினை ஒன்றைப் பற்றிச் சிந்தித்தல்
2.எல்லோரும் சத்தமாகச் சிரித்தல்
3.ஒரு நிமிடம் கண்களை மூடி மௌனமாக நிற்றல்

3. ஒவ்வொரு நாளும் குறிப்பிட்டளவு நேரம் மனதை ஒரு நிலைப்படுத்தக்கூடிய செயற்பாடுகளை தொடர்ந்து செய்து வருவதால் கிடைக்கும் நன்மையாதாக இருக்கும்.

1.மனதில் அமைதி கிடைக்கும்
2.கோபம் அதிகமாகும்
3.உள்ளத்தில் அகங்காரம் தோன்றும்

4.வீட்டில் உமது தந்தை உம்மை அழைத்து அவரது அலுவலகப் பணிதொடர்பான ஒரு வேலையை செய்து முடிப்பதற்கு உதவி கேட்கின்றார் .அப்போது நீர் செய்யக்கூடியது யாது?

1.அந்த வேலை பற்றி எனக்கு எதுவும் தெரியாது எனக் கூறுதல்
2.அவரவர் வேலையை அவரவரே செய்தல் வேண்டும் எனப் புத்திமதி கூறுதல்.
3.தந்தையின் ஆலோசனையின்படி அந்த வேலையை செய்து கொடுத்தல்


(4 புள்ளிகள்)

05.ஆதவன் தன் வீட்டுக்கு வெளியே நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறான் அப்போது வேலியோரமாக ஒரு சிரட்டையில் நீர் தேங்கி நின்றது. டின் மீன் பேணி ஒன்று நிமிர்ந்து காணப்பட்டது.

1.ஆதவன் அங்கே செய்யவேண்டிய முக்கியமான கடமை என்பது யாது?
1.ரின்மீன் பேணியிலும் நீரை நிரப்பி சிரட்டையின் அருகில் வைத்தல்
2.சிரட்டை நீரைத் தட்டி ஊற்றி விட்டு சிரட்டையைக் கவிழ்த்து வைத்தல்
3.சிரட்டை நீரை யாரும் தட்டி வீழ்த்தாதவாறு எடுத்து மறைத்து வைத்தல்

2. ஆதவனின் அருகில் வந்த மேனன் ரின்மீன் பேணியை அருகில் இருந்த மரக கட்டையால் அடித்து சப்பையாக்கி விட்டு குப்பைக் கிடங்கில் வீசினான
1.இவனின் செயல் நன்மை தரக்கூடியது
2.இவன் செய்தது ஆதவனுளுக்கு எதிரான செயல்
3.இவனது செயல் சூழலை மாசுபடுத்தும் செயல்

3. கீழே காணப்படும் மனிதனின் மாதிரி முகங்களில் சோகத்தைக் குறிக்கும் முகம் எது?




4. காலையில் மேற்கொள்ளக்கூடிய சாதாரண அப்பியாச வகையில் அடங்காத படம் எது?





5. நாம் எவ்வாறான உணவுகள் உண்ணுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்?
1.பழங்கள் 2.இனிப்புப் பண்டங்கள் 3.காய்கறிகள்

6. பாடசாலையின் காலைக் கூட்டத்தில் அல்லது வகுப்பறையில் தினமும் காலையில் ஒரு மாணவர் வீதம் வெளிப்படுத்தக் கூடிய சிறந்த பழக்க வழக்கம் யாது?

1. மேடைப் பேச்சு 2.சமய உரை 3.நற்சிந்தனை

(6 புள்ளிகள்)

06. கீழே காணப்படும் படங்கள் அவதானியுங்கள் .அவற்றில் நீர் விரும்பும் செயற்பாடுகள் இருப்பின் (√) அடையாளமும் நீர் விரும்பாத செற்பாடுகளின் கீழ் (×) அடையாளமும் இடுக.




(------------------) (------------------) (------------------) (------------------)

(4 புள்ளிகள்)

07.கீழ்வரும் வினாக்களுக்கான சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. மரக் கிளையில் இருக்கும்போது மற்றவர் கண்ணுக்குப் புலப்படாத உடல் நிறததைக் கொண்ட பறவை எது?
1.காகம் 2.கிளி 3. கொக்கு

2. வேகமாக ஓடும் இயல்புடைய பிராணி எது?
1.மான் 2.சிங்கம் 3.யானை

3. மிகச் சிறிய மெல்லிய ஒலிகளையும் செவிமடுக்கக் கூடிய பிராணி எது?
1.மாடு 2.வௌவால் 3.மயில்

(5 புள்ளிகள்)

4. தனக்கு ஆபத்து வருவதை உணர்ந்து தனது உறுப்புக்களை தனக்குள்ளேயே இழுத்துக்கொண்டு பாதுகாப்பாக இருக்கும் பிராணி எது?
1.தவளை 2.முதலை 3.ஆமை

08.1 கீழுள்ள பறவைகளின் பெயர்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
1.வாத்து -----------------------------------------------
2.மயில் -----------------------------------------------
3.கிளி -----------------------------------------------

(6 புள்ளிகள்)

2.கீழுள்ள மிருகங்களின் ஆங்கிலப் பெயர்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
1.Deer--------------------------------
2.Donkey----------------------------
3.Zeebra-----------------------------

(6 புள்ளிகள்)

3. கீழுள்ள பழங்களின் சிங்களமொழிச் சொற்களை எழுதுக.
1.மாம்பழம்------------------------------------
2.தோடை-------------------------------------
3.விளாம்பழம் ------------------------------------

(3 புள்ளிகள்)

09.கீழே தரப்பட்டுள்ள சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1.சொற்களில் எழுதும்போது 400 என்பதனை எழுதும் சரியான முறையை எழுதுக. (------------------------------------)

2. பூசசியம் தொடக்கம் 9வரை எத்தனை அடிப்படை இலக்கங்கள் உள்ளன.? (------------------------------------)

3. 10,100,1000, 10 000 , --------------- அடுத்துவரும் எண்ணை எழுதுக. (------------------------------------)

4. 66 எனும் எண்ணை உரோமன் எண் குறியில் எழுதுக. (------------------------------------)

5. 5,6,4,7ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகச் சிறிய எண் எது? (------------------------------------)

6. 36,100 எனும் எண்ணின் முந்திய எண்ணை எழுதுக. (------------------------------------)

7. 28,999 ஐ.முந்திய எண்ணாகவும் 29,001 ஐ பிந்திய எண்ணாகவும் கொண்ட எண் எதுவென எழுதுக. (------------------------------------)

8. 496 + 357 என்பதைக் கூட்டி எழுதுக. (------------------------------------)

9. உமது பாடசாலையில் உள்ள 986 கதிரைகளில் 239 கதிரைகள் பழுதடைந்து விட்டன. எனவே நல்ல நிலையில் உள்ள கதிரைகள் எத்தனை? (------------------------------------)

10.ஒரு மீற்றர் துணியில் எட்டுக் கொடிகள் தயாரிக்கலாம் எனில் 32 கொடிகள் தயாரிக்க வேண்டும் எனில் எத்தனை மீற்றர் துணி தேவை? (------------------------------------)

(10 புள்ளிகள்)

10. ஓர் ஆக்கச் செயற்பாட்டிற்காக தரம் 5 மாணவர்கள் மூவர் ரொபிக் கடதாசி, வெற்றுத் தீப்பெட்டி ,யோகட்கப் ஆகிய பொருட்களை சேகரித்த விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. அவற்றினை அவதானித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.

| பொருட்கள் | மாணவர்கள் | | |
|---|---|---|---|
| | ஒசாமா | ஒபாமா | சதாம் |
| ரொபிக் கடதாசி | 96 | 75 | 46 |
| வெற்றுத் தீப்பெட்டி | 25 | 68 | 85 |
| யோகட் கப் | 70 | 90 | 56 |

1.ரொபிக் கடதாசியை அதிகமாகச் சேகரித்த மாணவன் மிகக் குறைவாகச் சேகரித்துள்ள பொருள் யாது? (------------------------------------)

2. ஒபாமா அதிகமாகச் சேகரித்த பொருள் யாது? (------------------------------------)

3. வெற்றுத் தீப்பெட்டிகள் மொத்தமாக எத்தனை சேகரிக்கப்பட்டுள்ளன? (------------------------------------)

4.சதாம் சேகரித்த மொத்தப் பொருட்களினதும் கூட்டுத்தொகை யாது? (------------------------------------)

5.மொத்தமாக 3 பொருட்களினதும் கூட்டுத்தொகையை நோக்குமிடத்து மிக அதிக பொருட்களை சேகரித்த மாணவன் யார்? (------------------------------------) (10 புள்ளிகள்)

11. | 1kg தேயிலை = 460.00 | 100g சீனி = 6.50 | 250g பருப்பு =35.00 |

மேலுள்ள மூன்று பொருட்களினதும் நிறைகளுக்கேற்ற பெறுமதிகளை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. 500 கிராம் பருப்பின் விலை யாது? (------------------------------------)

2. 250 கிராம் தேயிலை வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? (------------------------------------)

3. 450கிராம் சீனி வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? (------------------------------------)

4. 100 கிராம் தேயிலை, 100 கிராம் சீனி, 100கிராம் பருப்பு ஆகிய பொருட்கள் வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? (------------------------------------)

5. 500ரூபா பணத்தை செலுத்தி 1 கிலோ கிராம் தேயிலை வாங்கியவருக்கு மீதியாகக் கிடைக்கும் பணம் யாது? (------------------------------------)

6. ஒரு கிலோ கிராம் சீனி வாங்கும் ஒருவர் 100 ரூபாவைச் செலுத்தினால் கிடைக்கும் மீதிப் பணம் யாது? (------------------------------------)

7. ஒரு கிலோ கிராம் தேயிலை , 100 கிராம் சீனி 250 கிராம் பருப்பு ஆகிய வற்றை வாங்கி 500 ரூபாவைச் செலுத்தும் ஒருவர் இன்னும் செலுத்த வேண்டிய பணம் யாது? (------------------------------------)

8. 250 கிராம் நிறை கொண்ட 8 தேயிலைப் பொதிகள் செய்வதற்கு எவ்வளவு தேயிலை தேவை? (------------------------------------)

(16புள்ளிகள்)

12. நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துவிட்டேன்' என அறிந்தவுடன்............
மேலுள்ள விடயத்தின் கீழ் பொருத்தமான கருத்துள்ள 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாமல் எழுவாய, பயனிலை திருத்தமாக அமைதல் வேண்டும் (12 புள்ளிகள்)
1.------------------------------------------------------------
2.------------------------------------------------------------
3.------------------------------------------------------------
4.------------------------------------------------------------

## வினாத்தாள் 01 இன் விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. i | 2. ii | 3. iv | 4.iii | 5.iii | 6.2 | 7.1 | 8.1 | 9.2 | 10.i |
| 11.2 | 12.1 | 13.2 | 14.3 | 15.1 | 16.2 | 17.1 | 18.3 | 19.3 | 20.3 |
| 21.3 | 22.3 | 23.2 | 24.3 | 25.3 | 26.3 | 27.3 | 28.1 | 29.2 | 30.i |

31.ii 32.2 33.1 34.3 35.வெள்ளை 36.6 ஆவதாக 37.5 38.90/- 39.45/- 40.3

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் சித்த மருத்துவத் துறை

### சித்த மருத்துவப் பிரிவின் ஆரம்பம்

சுதேச மருத்துவம் என நாம் கூறும் போது அதில் ஆயுள் வேத மருத்துவம், சித்த மருத்துவம், யுனானி மருத்துவம் ஆகிய பிரிவுகள் அடங்கும். 1929 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆம் திகதி கொழும்பில் சுதேச மருத்துவக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. இந்தக் கல்லூரியில் மேற்குறிப்பிட்ட 3 மருத்துவத்துறைகளும் ஆயுள் வேத மருத்துவம் சிங்கள மொழியிலும் சித்த மருத்தும் தமிழ் மொழியிலும் யுனானி மருத்துவம் ஆங்கில மொழியிலும் கற்பிக்கப்பட்டது. இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதற்கு காரண கர்த்தாவாக விளங்கியவர் அக்காலத்தில் சட்ட நிரூபணசபை அங்கத்தவராக இருந்த சட்டவல்லுனர் சேர் கே.பாலசிங்கம் ஆவார்.

1914 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக சட்ட நிரூபண நிர்வாகசபைகளில் வாதிட்டு இலங்கையின் மகா தேசாதிபதியின் அங்கீகாரத்துடன் 1929 ஆம் ஆண்டு இக் கல்லூரியை ஸ்தாபித்தார். இந்தக் கல்லூரியை நிர்வகிப்பதற்கு சுதேச மருத்துவசபை ஒன்று உருவாக்கப்பட்டு அதன் தலைவராகவும் இவர் நியமிக்கப்பட்டார். சபையினது முயற்சியினால் 1933 ஆம் ஆண்டு சுதேச மருத்துவ ஆரோக்கிய சாலை ஒன்றும் கொழும்பில் நிறுவப்பட்டது. இந்தக் கல்லூரியில் 4 வருட டிப்ளோமா கற்கைநெறி நடாத்தப்பட்டு சுதேச மருத்துவ சத்திர சிகிச்சையில் டிப்ளோமா (Diploma in indigenous medicine and Surgery -D.I.M.S) என்ற பட்டம் வழங்கப்பட்டது.

அநேகரின் வேண்டுகோள்களை செவிமடுத்த அரசாங்கம் 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் அரசாங்கத்தில் கல்வி அமைச்சராக இருந்த கௌரவ பதியுதீன் மொஹமட் அவர்களால் ஆயுள்வேதக் கல்லூரி தரமுயர்த்தப்பட்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்து நிறுவனமாக இணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டு 1983 ஆம் ஆண்டு முதல் புதிய பாடத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. 5 வருட கல்வியை பூர்த்தி செய்து 1 வருட ஆரோக்கியசாலைப் பயிற்சியையும் திருப்திகரமாக நிறைவு செய்யும் மாணவர்களுக்கு ஆயுள் வேத மருத்துவமானி, சத்திரசிகிச்சை மாணி, சித்த மருத்துவமானி, சத்திர சிகிச்சை மானி, யுனானி மருத்துவ மானி சத்திரசிகிச்கை மானிப் பட்டமும் முறையே வழங்கப்பட்டது.

### யாழ்.பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவப் பிரிவு

1984 ஆம் ஆண்டு யூலைமாதம் 2ஆம் திகதி சித்த மருத்துவத்துறை கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகள் காரணமாக மாற்றப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ நிறுவகம் என்ற அந்தஸ்தை பெற்றிருந்த துறைகளில் ஒன்றாகிய சித்த மருத்துவத்துறை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு பேராசிரியர் சு.வித்தியானந்தன் உபவேந்தராக இருந்தபோது மாற்றப்பட்டது.

கைதடியில் அமைந்திருந்த ஆயுள்வேத இலாகாவிற்கு சொந்தமான கட்டடத் தொகுதியில் சித்த மருத்துவத்துறையின் செயற்பாடுகள் 1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய பதிவாளராகிய திரு. வே.ந.சிவராசாவும் பேராசிரியர் சு.வித்தியானந்தனும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஸ்ரான்லி கல்வுகோடுடன் கலந்துரையாடி அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா அவர்களின் பணிப்புரையின் பேரிலேயே சித்த மருத்துவப் பிரிவு கைதடியில் இயங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

சித்த மருத்துவ மாணவர்கள் பி.எஸ்.எம்.எஸ். பாடத்திட்டத்தில் 5 வருட கற்கைநெறியைப் பூர்த்தி செய்த பின்னர் 1 வருடகால ஆரோக்கிய சாலைப் பயிற்சியையும் பூர்த்தி செய்ய வேண்டும். கைதடியில் அமைந்துள்ள அரசினர் ஆயுள்வேத ஆரோக்கிய சாலையில் மாணவர்கள் தங்கள் பயிற்சியை மேற்கொள்கின்றனர்.

ஆரம்ப காலத்தில் சித்த மருத்துவப் பிரிவு நிதிப் பற்றாக்குறையில் இருந்தபோது யாழ்.செயலகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய சிவதாசன் இரு தடவைகள் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 3 இலட்சம் ரூபாவை வழங்கி சித்த மருத்துவத்துறைக்கு கற்பித்தல் உபகரணங்கள், தளபாடங்கள் போன்றவற்றைகொள்வனவுசெய்ய உதவினர்.

## யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவின் வெள்ளிவிழா இன்றாகும்.

கடந்த 25 வருடமாக துணைவேந்தர்களாகக் கடமையாற்றிய பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், அ.துரைராஜா, க.குணரத்தினம், பொ.பாலசுந்தரம்பிள்ளை, சு.மோகனதாஸ், இ.குமாரவடிவேல் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் ந.சண்முகலிங்கன் ஆகியோரும் மற்றும் பீடாதிபதிகளும் பேரவை மூதவை உறுப்பினர்களும் சித்த மருத்துவத் துறை வளர்ச்சிக்கு தங்கள் பங்களிப்பினை வழங்கியுள்ளனர். பேராசிரியர் ந.பாலகிருஷ்ணனும் கலைப்பீடாதிபதியாக இருந்த சமயம் துறை வளர்ச்சிக்கான சேவையை ஆற்றியுள்ளார்.

### சித்த மத்துவத் துறையின் எதிர்காலம்

25ஆண்டுகள் கடந்த நிலையில் துறை ரீதியான வளர்ச்சி, போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி வைத்திய உத்தியோகத்தர்களின் திருப்திகரமான சேவைகள், மக்களின் எதிர்பார்ப்புகள் போன்றவற்றை திரும்பிப் பார்த்தல் எதிர்கால வளர்ச்சி யில் எமது பங்கு என்ன என்பதைப் புரிய வைக்கும்.

### துறைசார்ந்த வளர்ச்சி

சித்தமருத்துத்துறை யாழ். பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டபோது பல்கலைக்கழகத்தில் வைத்தியபீடம், கலைப்பீடம், விஞ்ஞான பீடம் ஆகிய மூன்று பீடங்கள் இருந்தன. தற்போது விவசாய பீடம் , முகாமைத்துவபீடம், பட்டப்படிப்புகள் பீடம் போன்ற பீடங்கள் உருவாகியுள்ளன. சித்தமருத்துவத்துறை 25 வருடகாலமாக அதே நிலையில் உள்ளது.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் அபிலாஷைகளுள் ஒன்று யாழ்ப்பாண மண்ணிற்கு சொந்தமான பாரம்பரிய வைத்திய முறை, இசை, நடனம், போன்ற கலைகள் உரிய இடத்தைப் பெற வேண்டுமென்பதாகும். இந்தக் கலைகள் யாழ்ப்பாணத்தில் வளர முடியாவிட்டால் வேறெங்கும் வளர்வது சாத்தியமில்லை. மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிப்பதில் பல்கலைக் கழகத்தின் பங்கு உயர் ந்ததாகும். இதற்கேற்ப திட்டங்கள் உருவாக வேண்டும்.

### போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி


போதனா வைத்தியசாலைகளுக்கு இரு கடமைகள் உள்ளன.

அ) மக்களுக்கான விஷேட சிகிச்சையை வழங்கும் உன்னத நிலையமாக விளங்குதல்.

ஆ) 1) பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான அடிப்படை வசதிகளை தொடர்ந்து வழங்குதல்.

2) விரிவுரையாளர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

மேற்கூறிய விடயங்களை பல்கலைக்கழக நிர்வாகம் ஆயுள் வேத இலாகாவின் ஆணையாளருடன் கலந்துரையாடி போதனா வைத்திய சாலை அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள



வேண்டும். இந்தவிடயம் சாத்தியப்படும் நிலையில் வைத்திய உத்தியோகத்தர், விரிவுரையாளர்களுக்கான திட்டமிடப்பட்ட பாடத்திட்டத்துடன் அமைந்த பட்டப்பின் படிப்பை சித்த மருத்துவப் பிரிவு ஆரம்பிக்க வேண்டும்.

இ) சித்த மருத்துவப்பிரிவு தனது துறைக்கு தேவையான விடயங்களை தானே தீர்மானிக்கும் நிலை உருவாக வேண்டும். மற்றத் துறைகளோ, பீடங்களோ சித்த மருத்துவத் துறையின் செயற்பாடுகளை வரையறை செய்யும் நிலை மாற்றப்பட வேண்டும். ஒரு துறை விருத்திக்கு சம்பந்தப்பட்ட மற்றைய துறைகள் உதவுவது மிகவும் அவசியமானது. ஆனால் ஒரு துறையின் சுயநிர்ணய உரிமைகளை ஆக்கிரமித்தல் முன்னேற்றத்திற்கு தடையாக அமையும்.

ஈ) வைத்திய உத்தியோகத்தர்கள் சித்த மருந்துகளை பெருமளவில் பாவித்து சிகிச்சை அளிக்கும் நிலை உருவாவதற்கு சித்த மருந்து தயாரிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வைத்தியசாலைகள் ஆரம்பிக்க முதல் மருந்து உற்பத்தி கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

உ) மக்களின் சுகாதாரத் தேவைகள் இனம் காணப்படவேண்டும். உதாரணமாக யாழ்.மாவட்டத்தில் எந்தநோய்களுக்காக சித்த மருந்துகளை மக்கள் நாடுகின்றார்கள் என்பதை வைத்தியசாலைகளில் மேற்கொள்ளும் ஆய்வு மூலம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஊ) சித்த மருந்துகளால் மாற்றக்கூடிய நோய் நிலைகள் யாவை என்பதை அறிந்து கொண்டு அந்த நோய்களுக்குரிய திருப்திகரமான சிகிச்சையை வழங்கவேண்டும்.

எ) சித்த மருந்துகளால் மாற்ற முடியாத ரோகங்களை சம்பந்தப்பட்ட வைத்திய நிலையங்களுக்கு அனுப்பும் வழிமுறைகளை கைக்கொள்ளும் நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட விடயங்களை எமது சவால்களாக ஏற்று வருங்காலத்தில் உத்வேகத்துடன் செயற்பட்டால் மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்கலாம்.

சித்த மருத்துவப்பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் தங்களுடைய பாடத்திட்டங்களை பூர்த்திசெய்வதற்கு ஆய்வு கூட வசதிகள், நூலக வசதி கள், வைத்திய கல்வி சார் உபகரணங் கள் போன்றவற்றை காலம் தாழ்த்தாது பல்கலைக்கழக நிர்வாகம் நிறைவு செய்து கொடுக்க வேண்டும்.

**பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி**
**சித்த மருத்துவத்துறை**

மேற்கூறப்பட்ட விடயங்கள் இனி வரும் 25 ஆண்டுகளில் நிறைவேற்றப்படுமானால் 50 ஆவது ஆண்டு பொன்விழா திருப்திகரமாக அமைவதுடன் சித்த மருத்துவமும் உன்னத நிலையிலிருந்து மக்கள் தேவையை பூர்த்தி செய்யும்.

மக்களின் வாழ்க்கை முறையோடு சம்பந்தப்பட்டு அவர்களது அன்றாட வாழ்வில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தாத எந்த ஒரு செயற்பா டும் மக்களுடன் இணைந்திருக் கமாட்டாது என்பது யாவருமறிந்ததே. ஒரு துறை வளர்ச்சிக்கு சகல மட்டத்திலும் உரிய தேவைகளை சம்பந்தப்பட்டவர்கள் காலம் கடத்தாது செய்து முடித்தால் அதன் பலன் நிச்சயம் மக்களை சென்றடைவதுடன் மக்கள் மனதில் அழியா இடத்தைப் பெறும்.




நயினாதீவு
ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின்
50 ஆவது ஆண்டு விழாவையொட்டிய
பொன்விழாவும்
“அமுதசுரபி” மலர் வெளியீடும்

தலைமை: திருமிகு.தம்பிமுத்து சிவானந்தன்
(தலைவர் அமுதசுரபி அன்னதான சபை)
காலம்:02.07.2009 வியாழக்கிழமை
நேரம்:பிற்பகல் 4.00 மணி
இடம்: அமுதசுரபி கல்யாண மண்டபம்

பிரதம விருந்தினர் :-
ப.க.பரமலிங்கம்
(தலைவர் -வடமாகாண பொதுசேவை ஆணைக்குழு
நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம்)

சிறப்பு விருந்தினர் :-
திருமிகு. க.கணேஸ் அவர்கள்
(யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்)

கௌரவ விருந்தினர்கள்:-
திருமிகு.கலாநிதி.மா.வேதநாதன்
(தலைவர்-இந்துநாகரிகத்துறை - யாழ்.பல்கலைக்கழகம்)
உயர்திரு.E.S.P. நாகரெத்தினம் அவர்கள்
(நாகரெத்தினம் அன்கோ உரிமையாளர்)
உயர்திரு.தியாகராசா ஸ்ரீ மோகனராஸ் அவர்கள்
(சேது களஞ்சிய உரிமையாளர் - திருநெல்வேலி சந்தை)
திருமிகு.மு.நந்தகோபாலன்
(உதவி அரசாங்க அதிபர் -வேலணை தெற்கு)
திருமிகு.பூ.சிவநேசன்
(பிரதம பொறியியலாளர் -வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம்)
திருமிகு.K.மகேந்திரலிங்கம்
(செயலாளர்-பிரதேச சபை- வேலணை)
திருமிகு.கு.கங்கைவேணியன்
(உரிமையாளர் -வேணி கள்ஞ்சியம் -யாழ்ப்பாணம்)
திருமிகு.தெய்வேந்திரன்
(N.E.C.C.DEP மாவட்ட பணிப்பாளர்)
லெப்டினன்ட் G.V.N.J. PERERA
(பொறுப்பதிகாரி கடற்படைதளம் நயினாதீவு)
திருமிகு. சங்கரப்பிள்ளை ஞானகணேசன்
(பொறியியலாளர்- இலங்கை மின்சாரசபை -சுன்னாகம்)
திருமிகு.R.S.கஜேந்திரன்
(பதில் பிரதி முகாமையாளர் - இ.மி.ச.)
திருமிகு.K.லிங்கரூபன்
(மின்பொறியியலாளர்- மின்கட்டமைப்பு -இ.மி.ச.)
திருமிகு.V.சண்முகநாதன்
(மின் பொறியியலாளர் மின் கட்டமைப்பு இ.மி.ச.)
திருமிகு.T.சிவானந்தராஜா
(பொறியியல் உதவியாளா மின் உற்பத்தி இ.மி.ச.)
திருமிகு.S.இரட்ணவடிவேல்
(மின் அத்தியட்சகர் இ.மி.ச.)

நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்
இறைவணக்கம்
வரவேற்புரை:
திருமிகு.கு.சாந்தலிங்கம்
(ஓய்வுபெற்ற அதிபர் , செயலாளர் அமுதசுரபி அன்னதான சபை)
ஆசியுரை:
சம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்கள்
(நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்ஆலய பரம்பரை குருமணி)
கையிலை வாமதேவக்குருக்கள்
(நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்ஆலய பரம்பரை குருமணி)
நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ தேரோ
(நாகதீப விகாராதிபதி)
திருமிகு.கா.ஆ.தியாகராசா
(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் ,தலைவர்
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் அறங்காவலர் சபை)
தலைமை உரை:
திருமிகு.தம்பிமுத்து சிவானந்தன்
(தலைவர் அமுதசுரபி அன்னதான சபை)
மலர்வெளியீடு:
மலரை வெளியிடுபவர்:
திருமிகு.அ.சர்வானந்தராசா ஜே.பி.அவர்கள்
(மலர்குழு தலைவர். அதிபர் லக்சுமிபவான். ஒல்கெட் மாவத்தை கொழும்பு-10)
பிரதமவிருந்தினர்கள் உரை:
விருந்தினருக்கான கௌரவம்
வாழ்த்துரையும் பாராட்டுரையும்
நன்றியுரை ப.ந. உருத்திரலிங்கம்
( உப செயலாளர் அமுதசுரபி அன்னதானசபை)
இறைவணக்கம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம்
அமுதசுரபி அன்னதானசபை
நிர்வாகத்தினர்.

(C/2693)




## க.பொ.த. உயர்தரப் பரீட்சை வெட்டுப்புள்ளி இன்று வெளிவரும்

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு இவ் வருடத்தில் மாணவர்களை அனுமதிப்பதற்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை வெட்டுப் புள்ளிகள் இன்று வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவ்வருடம் 20 ஆயிரம் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார். நாட்டின் சகல பல்கலைக் கழகங்களிலும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் 2009 ஆம் ஆண்டுக்கான பாடவிதானங்கள் ஆரம்பிக்கப்படுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஓ-6)

## உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தையும் கணனி மயப்படுத்த நடவடிக்கை

### அமைச்சின் செயலாளர் தகவல்

(கொழும்பு)

நாடு பூராகவும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை கணனி மயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் கெசன் ஹேரத் தெரிவித்துள்ளார். வானொலி நிகழ்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறிய தாவது,

இத்திட்டத்திற்கு தகவல் தொழில் நுட்ப இலத்திரனியல் உள்ளூராட்சி மன்ற சேவைத் திட்டம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

முதலாவது செயற்திட்டம் தற்பொழுது நீர்கொழும்பு மாநகர சபை, சீதவாக்க நகரசபை மற்றும் ஹோமாகம பிரதேசசபை ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் முகவர் நிறுவனத்தின் இச் செயற்திட்டமானது அடுத்த வுருடம் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும். இத் திட்டத்திற்கு தேவையான மென்பொருட்களைத் தயாரிக்கும் பணி அடுத்த வருட முற்பகுதியில் நிறைவடையுமென தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் வசந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாட்டில் தகவல் தொழில்நுட்பத்தை வலுவடையச் செய்யும் நோக்கில் இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

இருப்பினும் ஒபாமாவின் சொற்கள் அவனின் காதில் விழுந்ததோ இல்லையோ, அவன் செய்த குற்றம் அவன் தந்தையின் பிளந்து கிடந்த வாழ்வின் தவறான பக்கத்தில் பிறந்ததுதான். அவன் எதிர்த்துப் பேசவில்லை. ஒபாமாவின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாவதையோ அல்லது அவரின் புத்திமதிகளைக் கேட்டு அவரின் அபிலாஷைகளை அடைவதையோ அவன் விரும்பி இருக்க வாய்ப்பில்லை. அவனுக்கு வேண்டியதெல்லாம் இசைப் பேழைகளும், கூடைப்பந்து விளையாட அணியும், ஒபாமாவின் சப்பாத்தும் தான் என்பதை யூகித்தார் ஒபாமா.

ஒபாமாவும் பேர்ணாட்டும் வீதிக்கேறினார்கள். அப்போது பேர்ணாட் தனது கையால் ஒபாமாவின் கழுத்தைத் தழுவியணைத்தான். "உண்மையில் ஒருவனுக்கு உன்னைப் போல ஒரு அண்ணன் இருப்பது எவ்வளவு நன்றாக இருக்கிறது தெரியுமா?" என்று கூறிவிட்டு அவசரமாகக் கிளம்பிவிட்டான்.

குடும்பம் என்பது என்ன? பெற்றோர் குழந்தைகள் என்ற மரபணுச் சங்கிலித் தொடராகுமோ? அல்லது மக்களைப் பெற்றெடுத்து வளர்க்கத் தேவையான சமூக பொருளாதார அமைப்பெனலாமா? அல்லது வெற்றிடத்துக் கப்பால் எட்டப்படும் அன்பின் களஞ்சியமா? இவ்வாறு ஆராயத் தலைப்பட்டார் ஒபாமா.

அவர் வாழ்ந்த சூழ்நிலையில் விடைகாண முடியவில்லை. குடும்பம் என்பது தன்னைச் சுற்றி காலத்துக்கு காலம் அவர் போட்ட வளையம் என்று தான் எண்ணியிருந்தார். முதலில் ஒரு உள்வட்டம். இதில் அன்பு நிலையானது. உரிமை உத்தரவாதம் உடையது. இதையடுத்து இன்னுமொரு வட்டம்.

இதில் அன்பு, காதல் எல்லாம் தேடிக் கொண்டவை. இதையும் சுற்றி மூன்றாவது



வட்டம். இங்கே ஒன்றாகப் பணிபுரிவோர் நண்பர்கள், நலன்விரும்பிகள். அடுத்த வட்டம் வியாபித்தது. நாடு, இனம், விழுமியங்கள் என்பவற்றை உள்வாங்கியது. ஒபாமாவின் குடும்பம் என்ற இந்த வரைவிலக்கணம் ஆபிரிக்காவில் நிலைத்து நிற்க முடியவில்லை.

எங்கே பார்த்தாலும் குடும்பம் தான். கடைத் தெரு, தபாலகம், வீதிகள், சோலைகள் என்று எங்குபோனாலும் ஒபாமாவின் குடும்பத்தினர் முன்னின்று உதவிக்கரம் நீட்டினர். என்ன வேண்டுமானாலும் சொல்ல வேண்டியது தான். போட்டி போட்டுக்கெண்டு தேடித் தருவார்கள். பகலில் ஒபாமா தன் பணிக்குச் சென்று விட்டால் அந்த இடத்திற்கு யாராவது உறவுக்காரன் ஓடோடி வருவான். மாலையில் ஔமாவுடன் முடிவில்லாத அழைப்புகளையேற்று விருந்துக்குப் போக வேண்டும். மாமன்மார், மருகர்கள், ஒன்றுவிட்ட சகோதரன்/சகோதரிகள் நேரம் காலம் பார்க்காது சாப்பாட்டுக்கு மேல் சாப்பாடு என்று உயிரை வாங்குவார்கள். 87

தப்ப வழியிராது. வற்றாத நன்றியுணர்வோடு ஒபாமா எல்லாவற்றையும் ஏற்றார். இது தான் ஆபிரிக்கர்களின் பண்பாடு! சுயநலத்தால் ஒதுங்கி வாழும் அமெரிக்கர்களோடு ஒப்பிடுகையில் ஆபிரிக்காவின் கலாசாரம் மேலானது. தொழில்நுட்ப வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றிற்கு மேற்குலகம் கொடுத்த விலைதான் மனித உறவின் அழிவு.

நாட்கள் செல்ல செல்ல ஒபாமாவின் மகிழ்ச்சியும் குதூகலமும் குறையத் தொடங்கின. ஔமா கூறிய விடயங்கள் அவரின் மனதை அரித்தன. அவள் படித்தவள். உழைப்பு இயலளவு அதிகம். வேலைவாய்ப்பு நிறையவுண்டு. ஆனாலும் அவளால் தனியாளாக வாழ முடியவில்லை. குடும்பத்துக்கு உதவ வேண்டுமானால் அவள் இன்னும் கூட உழைக்க வேண்டும். பல்கலைக்கழக விரிவுரைகள் முடிந்த பின் நைரோபியிலுள்ள வர்த்தகர்களுக்கு ஜேர்மன் மொழி வகுப்புகள் நடத்தினாள். அதன்மூலம் சேரும் வருமானங்களைச் சேமித்தாள். எல்லாம் அவளது கனவுகளை நனவாக்கும் ஆசைதான்.

ஜம்பொன்

(தொடரும்)

மிகப்பெரிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் கிடைக்கும். அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு வெற்றிகாண முயலவேண்டும்.

-மெகல்லன்

வலம்புரி

## இனவாதிகளை அதட்டுவதில் ஜனாதிபதி வெற்றி காண்பாரா?

13-வது திருத்த சட்டமூலத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆளாகியுள்ளார்.

இந்த கட்டாயம் இந்தியாவின் அழுத்தம் - மேற்குலக நாடுகளின் கோபம் -யுத்தத்தில் தமிழர்கள் பாதிக்கப்பட்டுவிட்டார்கள் என்ற மன உறுத்தல் போன்ற பல காரணங்களினால் ஏற்பட்டிருக்கலாம்.

எனவே விரும்பியோ விரும்பாமலோ 13-வது திருத்த சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டிய தேவை இலங்கை அரசுக்குக் கட்டாயமாகியுள்ளது.

13-வது திருத்த சட்டமூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வாகாது. 13-வது திருத்த சட்டமூலத்திற்கு அப்பாற்பட்ட அதிகாரங்கள் குறித்தும் ஆராயவேண்டுமென்பது இலங்கை இன விவகாரம் தொடர்பில் நேர்மையுடன் சிந்திப்பவர்களின் கருத்தாகவுள்ளது.

இந்த நிலைப்பாட்டில் இந்தியாவின் நேர்மையுடைய அரசியல்வாதிகளும் உடன்படுகின்றனர்.

13-வது திருத்த சட்டமூலத்திற்கு மேலதிகமான அதிகாரங்களுடன் கூடிய தீர்வை முன்வைக்கவேண்டுமென இந்தியா கூறியிருக்கும்.

13-வது திருத்த சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதில் கூட நான் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளேன்.

நிலைமை இதுவாக இருக்கும்போது, 13-வது திருத்த சட்டமூலத்திற்கு அப்பால் செல்வதென்பது உடனடிச் சாத்தியம் இல்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிடம் கூறியிருப்பார்.

இதற்கு இந்தியா சரி, 13-வது திருத்த சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதையாவது முதலில் செய்யுங்கள்.

அதனை நடைமுறைப்படுத்த உங்களால் முடிகிறதா? பார்ப்போம் என்று கூறியிருக்கும்.

ஆனால் 13-வது திருத்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் அரசிலிருந்து விலகி விடுவோம் என ஜாதிக ஹெல உறுமய உறுமுகிறது.

கூடவே ஜே.வி.பியும் சண்டப்பிரசண்டம் கொண்டுள்ளது. இவற்றுக்கு மேலாக, நோர்வேயை எதிர்த்து வீதியில் உண்ணாவிரதம் இருந்த புத்த பிக்கு போன்றவர்களும் 13-வது திருத்த சட்டமூலத்தை எதிர்க்கும் பணியில் இணைந்து கொள்வர்.

இதில் இணைவது தங்களைத் தூக்கி விடும் என்றால், ஐக்கிய தேசியக் கட்சியும் சேர்ந்து கொள்ளும்.

ஆக, இனவாதிகளை அதட்டி அவர்களை அடக்கி இருத்தி 13-வது திருத்த சட்டமூலத்தை ஜனாதிபதி அமுல்படுத்துவாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# இலங்கையால் முடியாவிடின் உறுப்பு நாடோ, தனிநபரோ சர்வதேச நீதிமன்றிடம் விசாரணைக்கு கோர முடியும்

## புதிதாக இணைந்து கொண்ட சிலி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட தமிழ் மக்கள் மரணங்கள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பாக இலங்கை அரசே முதல் கட்டமாக விசாரணை நடத்த வேண்டும் என்றும் அதனை அரசு செய்ய முடியாவிடின் விசாரணை தொடர்பாக எந்தவொரு அங்கத்துவ நாடோ, எந்தவொரு தனிநபரோ...

விசாரணைக்கான கோரிக்கையை விடுக்க முடியும் என்று கடந்த திங்கட்கிழமை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இணைந்துகொண்ட சிலி தெரிவித்திருக்கிறது.

சிலியின் தலைமைத்துவத்துக்குப்பொறுப்பான அமைச்சர் செயலாளர் நாயகமான ஜோங் அன்ரனியா வியரா கல்லோவிடம் இலங்கை விடயம் தொடர்பாக நியூயோர்க்கில் உள்ள இன்னர்செற்றிப்பிறஸ் கேள்வி எழுப்பியபோது இலங்கையின் நிலைவரத்தை தேசியவாத கெரில்லாப்படைக்கு எதிரான யுத்தம் என்று குறிப்பிட்ட வியரா கல்லோ முதல் கட்டமாக இலங்கை அரசினாலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தால் இதனைச் செய்ய முடியாவிட்டால் இது மிகவும் சுலபம். உறுப்பு நாடு ஒன்று இதற்கான கோரிக்கையை விடுக்கவேண்டும் அல்லது எந்தவொரு தனி நபரும் விசாரணைக்கு கோரிக்கை விடுக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் சுலபம் என்பது வெகு தொலைதூரத்தில் இருப்பதாக இன்னர்சிற்றிப்பிரஸ் நிருபர் மத்தியூட் ரஸல்லி இது தொடர்பான செய்தி ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலையில் பட்டினிக்கு எதிரான அமைப்பின் 17 பணியாளர்கள் படுகொலை உட்பட மனித உரிமை மீறல்கள் தொடர்பான தனது விசாரணைக்குழுவை இலங்கை கலைத்து விட்டிருப்பது தொடர்பாக ஐ.நா.வால் அதனை நிறுத்தவோ அல்லது கருத்துத்தெரிவிக்கவில்லை என்று இன்னர் சிற்றிப்பிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை வட இலங்கையில் தடுத்து வைத்திருப்போர் தொடர்பாக அதாவது அவர்களின் எண்ணிக்கை மற்றும் இடம்குறித்து அறிக்கைகளுடன் ஐ.நா.வின் மனிதாபிமான ஒருங்கிணைப்பு அலுவலகம் சர்ச்சைப்படுகிறதே என்று செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் மொண்டாஸிடம் இன்னர் சிற்றிப்பிரஸ் திங்கட்கிழமை கேள்வி எழுப்பிய போது அவை ஐ.நா.வின் முகாம்கள் அல்ல என்று மொண்டாஸ் பதிலளித்திருக்கிறார். (ஓ-6)

## ஒப்பந்த காலத்தை நீடிக்குமாறு கோரிக்கை

தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்ற தங்களது ஒப்பந்த கால எல்லையை நீடித்துத் தருமாறு யாழ் மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணியாளர்கள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தங்களது பணிக்கான ஒப்பந்த கால எல்லை முடிவுறும் நிலையில் அதற்கான கால எல்லையை நீடித்துத்தருமாறு கோரியதுடன் மேற்படி திணைக்களத்தில் இதுவரையில் நிரப்பப்படாத வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

மேற்படி பணியாளர்களது கோரிக்கை தொடர்பில் உடனடி அவதானத்தைச் செலுத்தியுள்ள அமைச்சர் கால் நடை அபிவிருத்தி அமைச்சுடன் கலந்துரையாடி இவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## தமிழ் இராணுவப்படையணி உருவாக்கும் திட்டம் குறித்த எந்தவொரு திட்டமும் அரசிடம் இல்லை

### கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் இராணுவப் படையணி ஒன்று அமைக்கப்படவுள்ளதாக தேச நிர்மாண அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் பி.பி.சிக்கு அளித்த செவ்வியில் உண்மையில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழ் இராணுவப் படையணி ஒன்றை அமைப்பதற்கு இராணுவத்தளபதி மேஜர் சரத்பொன்சேகா திட்டமிட்டு வருவதாக அமைச்சர் முரளிதரன் தெரிவித்திருந்தார்.

எவ்வாறெனினும் இந்தக் கருத்து அடிப்படையற்றதெனவும் அவ்வாறான எந்தவொரு திட்டமும் அரசிடம் இல்லை எனவும் கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

## முதலாம் ஆண்டு நினைவுப் பேருரை

(வட்டுக்கோட்டை)

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் முதலாம் ஆண்டு நினைவுப் பேருரை வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல்3 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளில் திருமுறை பாராயணத்தினைத் தொடர்ந்து இன்றைய சூழலில் இந்து சமயத்தவர்கள் ஆற்றவேண்டிய சமூகக் கடமையும் சிவத்தமிழ்ச் செல்வியின் வழிகாட்டலும் எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரை ஆற்றவுள்ளார். (ஓ-27)

## நாய்க்கடியை அலட்சியம் செய்த பெண் ஐந்து மாதங்களின் பின் உயிரிழப்பு

(கொழும்பு)

வீட்டில் செல்லமாக வளர்த்த 11/2 மாத நாய்க்குட்டி கடித்து ஐந்து மாதங்களின் பின்னர் குடும்பப் பெண்ணொருவர் மரணித்துள்ளதாக அநுராதபுரம் போதனாவைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

எப்பாவெல அதிராணிகம கிராமத்தைச் சேர்ந்த ஜீ ஜீ கருணாவதி என்ற குடும்பப் பெண்ணே பிரஸ்தாப சம்பவத்தின் பின்னர் உயிரிழந்தவராவார். வீட்டு வாசலில் உறங்கிக்கொண்டிருந்த நாயின் காலை தெரியாமல் மிதித்த போதே நாய்க்குட்டி குறித்த பெண்ணின் கால் விரல் பகுதியைக் கடித்துள்ளது. நாய்க்கடிக்குள்ளான இப்பெண் காயமான விரலை சவர்க்காரமிட்டுக்கழுவி விட்டு வைத்தியரை நாடாமல் இருந்துள்ளார். நாய் கடித்து ஐந்து மாதங்களின் பின் இப்பெண் நோய் வாய்ப்பட்ட அதேவேளை நோயை இனங்கண்டு கொள்ள முடியாமல் போனதால் தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபின் மரணமடைந்தார்.

இவரது மரணத்துக்குக் காரணம் நாய் கடித்தமையே என்பது மரணவிசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. (ஓ-6)

# பகவானே எங்கும் நிறைந்த தெய்வம்

தமது வாழ்க்கையே தாம் உலகுக்கு அளிக்கும் செய்தி என்று அறிவிக்கின்றார் பாபா. பகவானின் முன்னிலையிலிருந்து அவருடைய கருணை, எளிமை, உள்ளொளி, பிரேமை ஆகியவைகளை நன்கு கவனித்துக்கொள்வதே இறையொளியைக் காண அடியார்களுக்கு கிடைக்கும் அரிய வாய்ப்பாகும். இறைவனைக் காண்பதென்பது இலேசான விடயமா? இருந்தும் நாம் முயற்சிக்கவில்லை. காரணம் நாம்செய்யும் பாவவினை. எத்தனையோ காலமாக சேர்ந்த இருள் ஒரு தீபத்தை ஏற்றுவதனால் மறைந்து விடுவது போல் நம் முன்னே மனித உருவில் நடமாடும் தெய்வம் நம் பாவத்தை நீக்கி நல் ஒளியை ஏற்ற பரந்த ஒளியாக ஒளிர்கின்றார். ஒவ்வொருவருக்கும் ஏற்றவகையில் பரிகாரம் தருகின்றார். ஏற்றுக் கொள்வதும் கொள்ளாததும் நம்மைப் பொறுத்தது.

பகவானை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை அடியார் ஒருவர் விளக்கும் போது, இதயத்தின் மத்தியில் ஒரு அகன்ற ஆழமான நீர்ப்பரப்பு உள்ளது. நீரின் மேற்பகுதி அலைகளேதுமின்றி சலனமற்று இருக்கின்றது. அதனை மனக் கண்ணில் பார்.

அச்சலனமற்ற நீர்ப்பரப்பின்மேல் ஒரு தாமரை எழுவதாகவும் அப்பூவின் நடுவே ஒரு ஒளிச்சுடர் இருப்பதாகவும் எண்ணிக்கொள். அவ்வொளிச் சுடர்நடுவே பகவான் பாபாவை பிரதிஷ்டை செய்துவிடு. ஒவ்வொரு முறையும் மூச்சு விடும் போது பகவானின் அன்பையும் சேர்த்து மூச்சு விடுவதாக எண்ணிக்கொள். இந்த அன்பு பாபாவின் அன்பு. இவ் அன்பு உன்னையும் சார்ந்து பிறரையும் சேரட்டும். அன்றிலிருந்து பகவான் உன்னுடையவரே என்கிறார் அவ்அடியார்.



பகவானு டன் ஐக்கியமாவது எப்படி என்றும் விளக்குகின்றார் அவ்வடியார். அவரிடம் தொடர்ந்து அன்பு செலுத்து. இவ்வுலகமும் அண்ட வெளியனைத்தும் அவரே என்று எண்ணிக்கொள். இவ்வுலகினை பகவானின் உடலாகவும் நாம் அனைவரும் இவ்வுலகிலுள்ள சிறு அணுக்கள் என்றும் கொள்வாயாக.

பக வானே எங்கும் நிறைந்த கடவுள். அவரின் நிழல் உருவங்களே அனைத்து உயிரினமும் என நினைத்து ஒவ்வொருவரிடத்தும் அன்பு செலுத்து. அப்போது பாபா என்னும் பரந்த தெய்வத்துடன் இணைந்து விடுவோம். கண்களுக்குத் தெளிவான காதுகளில் ஓங்கி ஒலிக்கின்ற இவ் அறிவுரை களை உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு பகவான் பாபா வழங்குகின்றார்.

ஜெய்சாயிராம் யாதவன்

# உரிமையாளருக்கு கிடைக்கப் பெறாமல் திரும்பிய வாகனப் பதிவுச் சான்றிதழ் விபரம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்தில் இருந்து பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டு உரியவர்கள் குறித்த முகவரியில் இல்லாத காரணத்தால் விநியோகிக்கப்படாத வாகனப் பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் வாகனப் பரிசோதனை தொடர்பான கடிதங்கள் யாழ். மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தில் கிடைக்கப் பெற்றுள்ளது.

அவற்றின் உரிமையாளர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் வாகனம் தொடர்பான ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் பி.ப 2 மணிக்குப் பின்னர் யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் கேட்டுக் கொள்கிறது.

கிடைக்கப் பெற்ற வாகனப் பதிவுச் சான்றிதழ்களின் விப்ரம் வருமாறு,

3 Sri 4895 - பத்தினியகை சேவியர் (நல்லூர்), 3 Sri 7843 -பாலசிங்கம் கேதிஸ்வரன் (நெல்லியடி), 7 Sri 7324 -பாலசிங்கம் பிறேமராஜகுமார் (சித்தன்கேணி), 7 Sri 7788 - நமசிவாயம் சிவகுமார் (சங்கத்தானை), 71 Sri 6410-திருமதி. றஞ்சன் இந்திரா (அரியாலை), 86 Sri 5689 -நாகலிங்கம் சுப்பிரமணியம் (கொக்குவில்), 86 Sri 8226 -செல்வராசா கிருஸ்ணகுமார் (மயிலிட்டி தெற்கு), 86 Sri 9421 -திருமதி. விமலாதேவி பிரபாகரன் (இணுவில் தெற்கு), 86 Sri 9849 -உலகநாதன் புஸ்பராஜகுருக்கள் (புளியங்கூடல்), 87 Sri 9359 -செல்வராசா மயூரன் (சுண்டுக்குளி), 88 Sri 8042 -நாகமணி பாலசிங்கம் (புத்தூர்),92 Sri 1596 -கருணாகரன் மகாரத்தினம் (தெல்லிப்பளை).

101 Sri 6426 -வைரமுத்து சதாநந் தன் (கைதடி), 106 Sri 4033 -வைரவப்பிள்ளை விஜயகுமரன் (கீரிமலை), 108 Sri 0245 -சற்குணராசா சசீலன் (இணுவில் கிழக்கு), 108 Sri 3984 -சண்முகதாசன் கந்தையா (நல்லூர்), 109 Sri 7184 -தர்மபாலு தனராஜா (மயிலிட்டி), 5- 9890 -செல்லன் செல்வராசா (தொல்புரம் மேற்கு), 7-8214 -சரவணமுத்து தவரட்ணம் (மிருசுவில்), 9- 6961 -சுப்பையா ஸ்ரீனிவாசன் (உரும்பிராயம் மேற்கு), 21 8521 -கந்தசாமி குலேந்திரன் (சுண்டுக்குளி), 84- 4463 -இராசதுரை சண்முகம் பிள்ளை (கொழும்பு), 86- 4515 -தர்மநாதன் பேரம்பலம் (ஏழாலை மேற்கு), 112-3756 -மகாலிங்கம் தர்மேந்திரா (உடுவில் கிழக்கு).

112-5926 -திருமதி கணேசமூர்த்தி சரஸ்வதி (இணுவில் மேற்கு) 113-4714 - சிவசாமி கிருபாகரன் (திருகோணமலை),121-2949 - சகாயநாயகம் இராயநாயகம் கன்ஸ்பார் (கொழும்பு), 122-1157 -சிவராசா சிவநாதன் (சுன்னாகம் கிழக்கு),124- 1312 - யேசுதாசன் சேவியர் (நாவற்குழி தெற்கு),139- 4319 - மெட்வின் றொசன் (யாழ்ப்பாணம்),141- 0522 -மேகிபராஜ் செல்லையா (சாவகச்சேரி),142- 3580 -இராசையா இராசேந்திரம் (அரியாலை),144- 8961 -முத்துராசா நந்தன் (யாழ்ப்பாணம்),146- 6189 - கனகசபை இராசலிங்கம் (கோண்டாவில் கிழக்கு),149- 5091 - வேலாயுதபிள்ளை நித்தியானந்த சிவம் (கிளிநொச்சி),200- 0980 -செல்லத்துரை ஜெயராசா (மட்டுவில் வடக்கு),200- 2341 - முத்தையா யோகராசா (குருநகர்),203- 2663 - தர்மலிங்கம் தயாபரன் (வட்டுக் கோட்டை).

205- 1222 - இரத்தினசிங்கம் யசோ தன் (கோண்டாவில் மேற்கு), 500- 0020- செல்லையா இராசரத்தினம் (யாழ்ப்பாணம்), 500- 0160- கிருஷ்ணபிள்ளை தர்மராசா (பொலிகண்டி), 500- 0590- நடராசா நந்தகுமார் (சித்தன்கேணி), 500- 0731- இராஜேந்திரம் தவராஜா (கரணவாய் தெற்கு), 500- 1258- சிவதாஸ் பிரபாகரன் (யாழ்ப்பாணம்), 500- 1569- பாலசுப்பிரமணியம் பொன்னம்பலம் (கோண்டாவில் மேற்கு), 500- 2547- சிவசம்பு மோகனவதி (திருநெல்வேலி கிழக்கு), 500- 2670- சின்னப்பு அந்தோனி (குருநகர்), 500- 2872- மந்திரி தங்கவேலு (இருபாலை கிழக்கு), 500- 3045- தெய்வேந்திரம் மதனரூபன் (நல்லூர்), 500- 3066- விசுவலிங்கம் சச்சிதானந்தராஜா (நுணாவில் கிழக்கு).

500- 3108- கந்தையா சிவபாதம் (யாழ்ப்பாணம்), 500- 3467- யோகராசா செபமாலை செக்ரஸ் (சாவகச்சேரி), 500- 3681- பாலசுப்பிரமணியம் பாலகிருஷ்ணன் (சுதுமலை வடக்கு), 500- 3754- ஐயாத்துரை பொன்னன் (மட்டுவில் மேற்கு), 500- 3800- செல்லத்துரை கருணானந்தன் (மட்டுவில் மேற்கு), 500- 3865- வேனட் அல்பிரட் புனிதா (பருத்தித்துறை), 500- 3925- தர்மகுலசிங்கம் கதிரன் (யாழ்ப்பாணம்), 500- 3935- பிரான்சிஸ் சிறில் அன்ரனி (குருநகர்), 500- 5421- அந்தோனிப்பிள்ளை தவதாஸ் (புலோலி) , 500-5494-நாகமுத்து யோகராஜா (இமையாணன்), 500- 5602- சிவசம்பு இரத்தினம் (பளை), 500- 5807- பவிலுப்பிள்ளை தேவதாஸன் (யாழ்ப்பாணம்), 500- 5873- தோமஸ் தவராசா (பருத்தித்துறை), 500- 5901- பொன்னையா மோகனராசன் (யாழ்ப்பாணம்), 500- 6644- ரவி பொன்னையா (புலோலி).

500-6794- செல்லத்துரை விஜயநாதன் (இணுவில் தெற்கு), 500- 6839- முருகேசு சிவசுப்பிரமணியம் (சாவகச்சேரி), 500- 6855- கனகரத்தினம் சாம்பசிவம் (பருத்தித் துறை), 500- 7242- சின்னத்துரை சிவகுமார் (உரும்பிராய் கிழக்கு), 500- 7339- சீனியன் குணபாலன் (மயிலிட்டி தெற்கு), 500- 7670-கந்தையா பாலச்சந்திரன் (சுன்னாகம்), 500- 7707- மரியதாஸ் யோகீஸ்வரன் (யாழ்ப்பாணம்), 500- 8135- கோபாலசிங்கம் கண்ணன் (காங்கேசன் துறை). 500- 8150- இராசையா மகாலிங்கம் (உரும்பிராய் கிழக்கு) , 500- 8264- சுப்பிரமணியம் ஞானமூர்த்தி (திருநெல்வேலி), 500- 8672- தவராசா வதனராஜா (பருத்தித்துறை).

500- 9021-செல்லத்துரை கோகுலன் உரும்பிராய் கிழக்கு). 500- 9340- மானுவேற்பிள்ளை சாள்ஸ் விஜயன் (குருநகர்), 500- 9706- பாலசிங்கம் நடனராசா (தெல்லிப்பளை) , 500- 9728- சீவரத்தினம் சுதர்சன் (கந்தர்மடம்) , 500- 9791- இராமகிருஷ்ணன் பிரபாகரன் (கிளிநொச்சி), 500- 9809-கதிரவேலு தெய்கீஸ்வரராசன் (கந்தர்மடம்), 500- 9889- சந்திரசேகரம் இளங்குமரன் (திருநெல்வேலி), 500- 9984- தம்பித்துரை இராஜதுரை (கிளிநொச்சி) , NP EN- 9175- விநாயகமூர்த்தி ஸ்ரீதரன் (சுழிபுரம்), NP GC- 6486-இராசையா ஜெயச்சந்திரன் (வல்வெட்டித்துறை), NP GD- 3053-சாரிஸிஸ் விவியன் (யாழ்ப்பாணம்).

NP GG- 9909- இரத்தினம் சிவகுமாரன் (திருநெல்வேலி),NP GH- 5873-பொன்னுத்துரை பாலச்சந்திரன் (வசாவிளான்), NP GH- 6008- இராசையா மகேஸ்வரன் (அச்சுவேலி), NP GL- 9055- ஐயாத்துரை சிவநேசன் (அரியாலை), NP GO- 6380- செல்லன் வசந்தகுமார் (அரியாலை), NP GO- 6550- சின்னத்தம்பி இராசரத்தினம் (சாவகச் சேரி), NP GP- 6103- இரத்தினம் மகேந்திரன் (சாவகச்சேரி), NP GQ- 0929- செல்லத்துரை நாகராஜா (அச்சுவேலி), NP GQ- 2250-அருமைத்துரை சிவவிநாயகம் (வல்வெட்டித் துறை).

NP GQ- 2311-நித்தியானந்தேஸ்வரா ஐயர் பரணிதரன் (கல்வியங்காடு),NP GQ- 2450-நாகமுத்து சுதாகரன் (தெல்லிப்பளை), NP GQ- 4594-செல்லையா ஸ்ரீகாந்தன் (சாவ கச்சேரி), NP GS- 6587-தம்பு தேவராஜா (யாழ்ப் பாணம்), NP GS- 6617- சிவசுப்பிரமணியம் கோபிநாத் (புத்தூர்), NP GX-8778- பாலச் சந்திரன் துஷ்யந்தன் (திருநெல்வேலி).

NP GZ- 0030-அரியராசா தவச்செல்வன் (அச்சுவேலி), NP GZ- 7502-சிவகுரு பிரபாகரன் (சண்டிலிப்பாய்), NP HA- 2238- சிவக்கொழுந்து உதயகுமார் (யாழ்ப்பாணம்), NP HA- 6108-செல்லத்துரை விமலேஸ்வரன் (நீர்வேலி), NP HC- 2575-இராசலிங்கம் சுரேந்திரன் (பிறவுண்வீதி), NP HE- 7234- பிரான்ஸிஸ் நிசாந்தன் (நாவாந்துறை), NP HF- 2095-குமரவேலு லோகப்பிரசன்னா (சுன்னாகம்).

NP HF- 8875-பாலசுந்தரம் அஜந்தன் (கொக்குவில்), NP HH- 8987-சீனியன் திருச்செல்வம் (பருத்தித்துறை) , NP HI- 2161- அப்புத்துரை பாலசிங்கம் (கொக்குவில்), NP HM- 4607-சின்னத்துரை சதீஸ்குமார் (மல்லாகம்), NP HS- 9723-புத்திரிநாதர் யூடியார் குமார் (குருநகர்), NP HZ- 6348- கேதிஸ்வர கௌரிபாலன் லிங்கேஸ்வரன் (காரைநகர்), NP JC- 2711-சின்னத்தம்பி சண்முகராசா (வண்ணார் பண்ணை),NP JD- 4245- விஜயரத்தினம் யுகராஜ் (நீர்வேலி) ,NP JD- 6972- நடராஜா கனகராஜா (இணுவில்), NP JG- 9893-பொன்னையா பத்மகாந்தன் (வட்டுக் கோட்டை).

NP JH-4073-கிருபாதாசன் ஜின்னநிருசன் (சுன்னாகம்), NP JI- 4613-இரத்தினசிங்கம் சிறிகண்ணன் (காரைநகர்), NP JK- 9907- புலேந்திரம் பிறேமதாசன் (உரும்பிராய்), NP JM- 0996-திருமதி. சமித்திரா சிவகுமார் (யாழ்ப்பாணம்), NP JN- 0734-மகாலிங்கம் கார்த்தீபன் (அச்சுவேலி), NP JT- 2718-திருமதி நித்தியமதன் சுகந்தினி (பண்டத்தரிப்பு), NP JU- 7732-தில்லைகண்ணு பன்னீர்ச்செல்வம் (மீசாலை), NP JY- 8386-திருமதி தேவநாயகி விக்கிணேஸ்வரன் (மீசாலை) , NP MB- 1374- யோசை மரியாம்பிள்ளை பிறேமதாஸ் (குடத்தனை).

NP MB- 1403-குமாரசாமி இந்திரகுமார் (மாதகல்), NP MB- 4440-ஜெயராமகிருஸ்ணன் முரளிதரன் (வண்ணார்பண்ணை), NP MD- 2140-நடராசா செல்வகுமார் (ஏழாலை), NP MD- 2979-சரண்ஜா விஜயரத்தினம் (கொக்குவில்), NP MD- 3400-சண்முநாதன் சிறிகரன் (திருநெல்வேலி).NP MD- 7605- பசுபதி சுரேஸ்குமார் (மல்லாகம்). NP ME-3466-சமூக அபிவிருத்தி சபை (யாழ்ப் பாணம்).

NP MF- 3434-சுப்பிரமணியம் ரஜனிகாந் (உரும்பிராய்), NP MF- 5740-வேலன் விஜயகுமார் (மல்லாகம்),NP MF- 6397- மயில்வாகனம் ஞானச்சந்திரன் (கொழும்புத் துறை),NP MG- 5935- பொன்னுத்துரை கணபதிப்பிள்ளை(கொடிகாமம்), NP MH- 8493-துரைரத்தினம் ரஜிகரன் (புலோலி கிழக்கு), NP MH- 8524-செல்லத்துரை அருணாசலம் (மல்லாவி).

NP MK- 6357-தவராசா சந்திரசேகரம் (கொக்குவில் கிழக்கு), NP MQ-6539- துரைச்சாமி தேவகுமார் (மயிலிட்டி வடக்கு), NP MQ- 6651-இராசரத்தினம் மோகனதாஸ் (புலோலி வடக்கு), NP MQ- 6771-யேசுராசா எட்வின் ஜெயராஜ் (மாதகல்) ,NP MQ- 6789- இராஜேந்திரம் ரமேஷ் (யாழ்ப்பாணம்), NP MW- 3444-மாவட்ட சிறுவர் பாதுகாப்புச் சபை (யாழ்ப்பாணம்), NP MX- 3087-பாலசிங்கம் ஜெயசங்கர் (யாழ்ப்பாணம்) , NP MX- 3339- மருதையா யோகராசா (திருநெல்வேலி). (ஓ-7)

## இறுதித் தீர்வை முன்வைப்பதற்கு

# சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு

## — ஒரு மாத கால அவகாசம் —

இனப்பிரச்சினை தொடர்பான இறுதி யோசனைத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு ஒருமாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க சமாதானச் செயலகத்தின் பணிகளை முடிவுக்குக் கொண்டு வருவதாக ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் செயலகமாக சமாதானச் செயலகம் செயற்பட்டு வந்தது.

இந்த நிலையில் இறுதித் தீர்வை முன் வைப்பதற்கு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு ஒருமாத கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாக சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க கூறினார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்திற்கான மொழி பெயர்ப்பாளர்கள் உள்ளிட்ட வளங்களை அரசாங்க சமாதானச் செயலகமே இதுவரை வழங்கி வந்தது.

சமாதானச் செயலகம் இன்மையால் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு நீண்டகாலம் கூடவில்லையென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதி நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ரஜீவ விஜயசிங்க அல்லது அவரின் சார்பில் ஒருவர் கூட்டங்களை நடத்த வேண்டுமெனத் தெரிவித்தார். (ஓ-6)

**Trinity College And University**

(PART OF THE EDUCATIONAL DIVISION OF THE U.I.C., INCORPORATED IN DOVER, DELAWARE - USA)

Jaffna Road, Manipay - T.P.No :- 060 - 221 - 6433

எமது மாணவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

மேற்படி எமது பல்கலைக்கழகத்தினுடைய அனைத்து பட்டப்படிப்புக்களும் 04/07/2009 அன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதால் அனுமதி விண்ணப்ப படிவம் பெற்ற அனைத்து மாணவர்களும் 03/07/2009ம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்க் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

Mobile :- 0777 - 110862

Mr.S.Selvathashan,
Coordinator (North)

## மேலுமொரு அனைத்துக்கட்சி குழுவை நியமிக்க ஜனாதிபதி திட்டம்

இலங்கையில் அபிவிருத்தி மற்றும் புனர் நிர்மாணம் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றுமொரு அனைத்து கட்சி குழுவொன்றை உருவாக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் தலைவர்களும் இந்த குழுவில் அங்கம் வகிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் நடைமுறைச் சிக்கல்கள், அரசியல் பிரச்சினைகள் குறித்தும் இந்த அமைப்பு ஆராயவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த விசேட அனைத்து கட்சி குழு மாத மொரு முறை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் காலத்தை இழுத்தடிக்கும் முயற்சியின் ஓர் அங்கமே இந்த புதிய அனைத்துக் கட்சி உருவாக்கம் என அரசியல் விமர்சனங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# இங்கிலாந்து அணியின் 'ஆஷஸ் நாயகன்' மைக்கெல் வோகன் ஓய்வு பெற்றார்

(எட்பாஸ்டன்)

இங்கிலாந்து அணியில் இருந்து புறக் கணிக்கப்பட்ட விரக்தியில் சர்வதேச கிரிக் கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக மைக்கெல் வோகன் அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர் மைக்கெல் வோகன் கடந்த 2003ஆம் ஆண்டு அணித் தலைவராகப் பொறுப்பேற்ற இவர் இங்கிலாந்து அணி 18 ஆண்டுகளுக்குப்பின் கடந்த 2005ஆம் ஆண்டு ஆஷஸ் டெஸ்ட் தொடரை வெல்ல முக்கிய காரணமாகத்திகழ்ந்தார்.

தொடர்ந்து அணியை திறம்பட வழிநடத்திய இவர் கடந்த 2008 ஆம் ஆண்டு வலது முழங்கால் காயம் காரணமாக அவதிப்படார்.

தவிர சிறப்பான ஆட்ட நிலையின்றி தவித்து வந்த இவர் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் அணித் தலைவர் பொறுப்பில் இருந்து விலகினார். அதற்குப்பின் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவில்லை.



இருப்பினும் அடுத்த வாரம் இங்கிலாந் தில் நடக்க உள்ள ஆஷஸ் தொடருக்கான அணியில் வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்த் திருந்தார்.

ஆனால் அணி நிர்வாகம் வோகனுக்கு வாய்ப்பு அளிக்கவில்லை. இதனால் அதி ருப்தி அடைந்த இவர் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற முடிபு செய்தார். அதன்படி நேற்றுமுன்தினம் தனது ஓய்வை முறைப்படி அறிவித்தார்.

இது குறித்து வோகன் கூறுகையில்;

ஓய்வு பெறுவதற்கு இதுவே சரியான நேரம் எனக் கருதுகிறேன். இளம் வீரர்களுக்குவழிவிடும் வகையில் எனது முடிபு அமைய வேண்டும் என விரும்புகிறேன்.

இங்கிலாந்து அணியின் தலைவராக செயல்பட்டதை பெருமையாகக் கருதுகிறேன். கடந்த 2005 ஆம் ஆண்டு ஆஷஸ் தொடரை கைப் பற்றியது எனது கிரிக்கெட் வாழ்வின் மறக்க முடியாத தருணம். அன்ரூ ஸ்ரொரஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி வரும் ஆஷஸ் தொடரில் சாதிக்க எனது வாழ்த்துக்கள் என்றார்.

### சிறந்த அணித் தலைவர்

❋ இங்கிலாந்து அணியின் சிறந்த அணித் தலைவராக வலம் வந்தார் 34 வய தான மைக்கெல் வோகன். இதுவரை 51 டெஸ்ட் போட்டி களில் அணியை வழிநடத்திய இவர் 26 வெற்றி 11 தோல்வி 14 சமனிலை பதிவு செய்துள்ளார். மற்ற எந்த இங்கிலாந்து அணித் தலைவர்களைக்காட்டிலும் இவரது செயல்பாடே சிறப்பானது.

❋ கடந்த 2004ஆம் ஆண்டு அணியை வழிநடத்திய வோகன் மேற்கிந்தியத்தீவுகள் மண்ணில் 37 ஆண்டுகளுக்கு பின் டெஸ்ட் தொடரை கைப்பற்றி அசத்தினார்.

❋ இவரது தலைமையில் கடந்த 2005 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி 40 ஆண்டுகளுக்குபின் தென்னாபிரிக்கா மண்ணில் டெஸ்ட் தொடரை வென்று அசத்தியது. அதே ஆண்டு வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி 18 ஆண்டுகளுக்குப்பின் சாதனை படைத்தது இங்கிலாந்து.

❋ இதுவரை 82 டெஸ்ட் போட்டிகளில் விளை யாடியுள்ள வோகன் 18 சதம் 18 அரைச்சதம் உட்பட 5 ஆயிரத்து 719 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இவரது சராசரி 41.44 தவிர 86 ஒரு நாள் போட்டிகளில் 16 அரைச் சதங்கள் உட்பட ஆயிரத்து 982 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

# டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஒரு வருடத்தில் பல மாற்றங்கள்



டெஸ்ட் கிரிக்கெட்டில் இன்னும் ஒரு வருடத்திற்குள் பல மாற்றங்கள் ஏற்படும் என சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் டேவிட் மோர்கன் தெரிவித்துள்ளார்.

இதன்படி டெஸ்ட் போட்டிகள் 5 நாட்களில் இருந்து 4 நாட்களாக குறைப்பது குறித்து ஆலோசிக்கப் பட்டுவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா ருடே இதழுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே மோர்கன் இந்த தகவலை தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் கூறியதாவது;

இருபது-20 கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கு முன் பாரம்பரிய மிக்க டெஸ்ட் கிரிக்கெட்டைக்காக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இதனால் இன்னும் ஒரு வருடத்திற்குள் டெஸ்ட் கிரிக்கெட்டில் பல மாற்றங்கள் ஏற்படும்.

குறிப்பாக டெஸ்ட் போட்டிகளை 5 நாட்களில் இருந்து 4 நாட்களாக குறைப்பது குறித்து ஆலோசித்து வருகிறோம்.

அத்துடன் பகலிரவு டெஸ்ட் பந்துகளின் நிறத்தில் மாற்றம், வர்ண உடைகள் என பார்வையாளர்களை கவரும் வண்ணம் டெஸ்ட் போட்டிகளை மாற்றுவது குறித்து ஆலோசித்து வருகிறோம் என்றார்.

ஏற்கனவே நடுவர்களின் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு, தாமதத்திற்கு அபராதம் என டெஸ்ட் போட்டிகளில் மாற்றங்கள் கொண்டுவந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# விம்பிள்டன் டென்னிஸ் தொடர்; அரையிறுதியில் வீனஸ், சபினா



(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், ரஷ்யாவின் டினரா சபினா ஆகியோர் தகுதி பெற்றனர். கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது.

நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், போலந்தின் ரட் வான்ஸ்காவுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடந்த இப் போட்டியின் முதல் செட்டை வீனஸ் 6-1 என எளிதாக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய இவர் 6-2 என நெருக்கடியின்றி வென்றார். இறுதியில் வீனஸ் வில்லியம்ஸ் 6-1,6-2 என்ற நேர் செட்களில் ரட் வான்ஸ்காவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

### சபினா அசத்தல்

மற்றொரு காலிறுதிப் போட்டியில் உலகின் நம்பர்-1 வீராங்கனையான ரஷ்யாவின் டினரா சபினா, ஜேர்மனியின் லிசிகியை எதிர்கொண்டார். முதல் செட்டை 6-7 என கோட்டை விட்ட சபினா, இரண்டாவது செட்டை 6-4 என தன்வசப்படுத்தினார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டை சபினா 6-1 என பேராடி கைப்பற்றினார். இறுதியில் சபினா 6-7,6-4,6-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

### முர்ரே வெற்றி

ஆண்கள் ஒற்றையர் நான்காவது சுற்றுப் போட்டிகளில் பிரிட்டனின் ஆண்டி முர்ரே 2-6,6-3,6-3, 5-7,6-3 என்ற செட் கணக்கில் சுவிட்சர்லாந்தின் வாவ்ரின்காவையும், அமெரிக்காவின் அன்டி ரோடிக் 7-6, 6-4,6-3 என்ற செட்கணக்கில் செக்குடியரசின் தோமஸ் பெர்டிக்கையும், அவுஸ்திரேலியாவின் லேடன் ஹெவிட் 4-6,2-6,6-1,6-2, 6-2 என்ற செட் கணக்கில் செக்குடியர சின் ராடெக் ஸ்டெபனக்கையும் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

# நடனக் கல்லூரி ஆசிரியையை மணக்கிறார் இர்பான் பதான்

நடனக் கல்லூரி ஆசிரியையின் காதல் வலையில் விழுந்த கிரிக்கெட் வீரர் இர்பான் விரைவில் அவரது கரம் பிடிக்கவுள்ளார். இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான், ஷிவாங்கி தேவ் என்ற பெண்ணை கடந்த 6 ஆண்டுகளாக காதலித்து வருகிறார். இவர் அவுஸ்திரேலியாவில்உள்ள இந்தியதூதரின்மகள் ஆவார்.

கடந்த 2003ஆம் ஆண்டு இந்திய அணி அவுஸ்திரேலியா சென்ற போது கான்பெராவில் நடந்த பயிற்சி ஆட்டத்தின் போது ஷிவாங்கியை இர்பான் சந்தித்தார். முதல் சந்திப்பே நட்பாகி, நாளடைவில் காதலாக மலர்ந்தது. ஷிவாங்கி அவுஸ்திரேலியாவில் பணியாற்றி வருகிறார். அத்துடன் அவர் நடனக் கல்லூரியையும் நடத்தி வருகிறார்.

கடந்த 6 ஆண்டுகளாக காதலித்து வந்த இவர்கள் தற்போது திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளனர்.

இது குறித்து இர்பான் பதான் கூறியதாவது; நாங்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டுள்ளோம். எங்களது திருமணம் நடக்க சிறிது காலம் ஆகும். ஆனால் நிச்சயமாக வதோதராவில் (குஜராத் மாநிலம்) பாரம்பரிய முறைப்படி நடைபெறும்.

ஷிவானி மிகவும் கூச்ச சுபாவம் உடையவர். எங்களது முதல் சந்திப்பிலேயே அதிகம் பேசவில்லை. மிகவும் அமைதியானவர். எங்களுக்குள் ஏற்பட்ட நட்பு நாளடைவில் காதலாக மாறியது. 3 ஆண்டுகளுக்கு முன்பு அவர் வதோதராவந்தபோது என்னை திருமணம் செய்து கொள்கிறாயா? என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவரும் ஒப்புக் கொண்டார். எங்களது காதலை இரு வீட்டாரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்வாறு இர்பான் பதான் கூறினார்.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆறுமாத காலத்தில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் உறுதி



மீண்டும் மீண்டும் அரசுடன் மோதல்களை தொடரும் திட்டத்துடனேயே புலிகளின் தலைமை ஏற்றுக்கொள்ள இயலாத நிபந்தனைகளை அரசாங்கத்தின் முன் வைத்து வந்தது.

இதன் விளைவாகவே தமிழ் பேசும் மக்கள் இன்று தீராத அவல நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் நேற்று முன்தினம் மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர் வரும் 6 மாத காலத்தில் வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு தன்னால் படிப்படியாக தீர்வு கான முடியும் எனவும்,

இன்றைய சூழலில் நம்முன்புள்ள அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க குறுகிய மற்றும் நீண்ட கால திட்டங்களை நடைமுறைப் படுத்த வுள்ளோம். யாழ்.நகரத்தை மட்டுமல்லாது யாழ்.குடாநாடு முழுவதையும் வளமான பூமியாக மாற்றக்கூடிய வாய்ப்பு எம்முன்பு உள்ளது.

இது எமது மக்களுக்குக் கிடைத்துள்ள பொன்னான வாய்ப்பு என்பதை எமது மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எதிர்வரும் யாழ். மாநகர சபைத் தேர்தல் குடாநாட்டு மக்கள் அனைவரதும் பிரச்சினைகளுக்கான தீர்வின் முதற்படியாகும் என்பதால் இத்தேர்தல் மூலமான வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக மக்கள் அனைவரும் மாற வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எமது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கரங்களைப் பலப்படுத்தினால் யுத்தம் காரணமாக அழிந்து போயிருக்கும் எமது தேசத்தை இரண்டே வருடங்களில் முழுமையாக மாற்றியமைக்க முடியும் எனவும் தெரிவித்தார். (ந)

# எரிபொருள் நிலையத்தில் நின்ற மரம் சரிந்து விழுந்தது

## மூவர் காயம்;திருநெல்வேலியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்திக்கு அண்மையாகவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் மரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது;

நேற்று பிற்பகல் வீசிய பலத்த காற்றினால் திருநெல்வேலி சந்திக்கு அண்மையாகவுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் நின்ற மரம் ஒன்று சரிந்துள்ளது.

இதில் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரான இளவாலை மாரிசன் கூடலைச் சேர்ந்த கே.வேலாயுதம் (வயது 50) மற்றும் இணுவிலைச் சேர்ந்த கைலயன் கிரிவாசன் (வயது 43), சங்கானையைச் சேர்ந்த கே.முருகையா ஆகியோரே காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (7)

# இலங்கையில் சிங்களவருடன்...

சிறப்பு கவனயீர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்மீது அ.தி.மு.க. சார்பில் பன்னீர் செல்வம், காங்கிரஸ் சார்பில் பீட்டர் அல்போன்ஸ், பா.ம.க. சார்பில் ஜி.கே.மணி, இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் ராமசாமி ஆகியோர் பேசினர்.

இலங்கையில் தமிழர்களின் நிலைமை படுமோசமாக இருப்பதாகவும், திறந்தவெளியில் ஆடு, மாடுகளை போல் அவர்கள் அடைக்கப் பட்டுள்ளதாகவும் கூறிய அவர்கள், அந்த மக்களுக்குத் தேவையான உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கிடைக்க செய்ய வேண்டும் என்று கோரினர்.

மேலும் தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றும் முயற்சிகளைத் தடுத்து வடக்கு, கிழக்கு பகுதிகளை மீட்டு தமிழர்கள் முழு உரிமையுடன் சிங்களவர்களுக்கு இணையாக வாழ்வதற்கு மத்திய அரசு மூலம் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினர். இதற்குப் பதிலளித்து முதல்வர் கூறுகையில்,

"இன்று இலங்கைத் தமிழர் பிரச்சினையை அரசியலாக்காமல் அனைத்து கட்சியினரும் ஒரே விதமான கருத்தை தெரிவித்தது மகிழ்ச்சி அளிக்கிறது.

50 ஆண்டுகால போராட்டம் இலங்கையில் நடைபெறும் பிரச்சினை என்பது சிங்களவர்களுக்கும் தமிழ் இனத்திற்குமான போராட்டமாகும். 50 ஆண்டு காலமாக இந்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இலங்கையில் உள்ள தமிழர்கள் சுதந்திரமாக வாழ வேண்டும். தமிழ் மொழி சீரழியாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவே போராட்டம் நடத்தப்பட்டது. இதன் அடிப்படையிலேயே தமிழீழம் அமைய வேண்டும் என்ற குரலும் எதிரொலித்தது.

இந்தியாவில் உள்ள பல்வேறு கட்சிகளுக்கு இதில் பல்வேறு நிலைப்பாடுகள் உண்டு. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு தமிழீழம் என்கிற பிரிவினைக்கு ஆதரவு இல்லை.

மாநில சுயாட்சி என்ற அளவில் தான் தீர்வு அமைய வேண்டும் என்பதுதான் அவர்களின் கொள்கையாக இருந்து வந்தது. ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இப்போது தமிழீழம்தான் தீர்வு என்று தனது நிலையை மாற்றிக் கொண்டுள்ளது.

பா.ம.க. கூட தமிழீழம்தான் தீர்வு என்று பேசி வந்தது. ஆனால் இன்று மாநில சுயாட்சி போதும் என்ற அளவுக்குப் பேசி வருகிறது. அதுதான் இப்போது முடியும். தமிழர்களுக்கு சம உரிமை, தமிழ்மொழிக்கு சம தகுதி, தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு. இவற்றுக்காக போராடும் நிலைதான் தற்போது உள்ளது.

இலங்கையில் தமிழர்களை மதிக்கின்ற ஓர் அரசு அமைய வேண்டும். எதிர்காலத்தில் தமிழர்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து ஒரு 'தமிழர் அரசை' அமைக்கும் நிலை உருவாகலாம். ஒரு காலத்தில் வெள்ளையர்கள் மட்டுமே அதிபராகலாம் என்று அமெரிக்காவில் இருந்த நிலை மாறி இப்போது கறுப்பர் இனத்தை சேர்ந்த ஒபாமா அதிபராகி இருக்கிறார்.

அதேபோன்று இலங்கையிலும் தமிழர்களின் அரசு அமைவதற்கு வெகு தூரம் இல்லை என்கிற நம்பிக்கையை நாம் பெற வேண்டும். அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், என்னை விட மகிழ்ச்சி அடைபவர் இந்த உலகில் வேறு எவருமே இருக்க முடியாது.

தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும். அவர்களுடைய வாழ்வாதாரத்தை வளமிக்கதாக மாற்ற வேண்டும் என்பது முக்கியமா? அல்லது அந்நாட்டு ஜனாதிபதியை குற்றவாளி கூண்டில் நிறுத்துவது முக்கியமா? என்பதை நாம் சிந்தித்து பேச வேண்டும்.

அங்குள்ள தமிழர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்க வேண்டும் என்றால் அது சிங்கள அரசின் மூலம்தான் முடியும். அதற்காக நாம் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் நம்முடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரை ஆதி முதல் அந்தம் வரை முழுமையாக தெரிந்தவன் நான். இதை 'பண்டார வன்னியன்' என்ற நாவல் மூலம் நான் விரிவாக எழுதியிருக்கிறேன்.

இலங்கைத் தமிழர்களுக்கான நிவாரணப் பொருட்கள் அவர்களைச் சென்றடைவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். ஏற்கெனவே செஞ்சிலுவைச் சங்கம் மூலம் தமிழக அரசோ மத்திய அரசோ நிவாரண உதவிகளை அவர்களுக்கு வழங்கி இருக்கிறது.

தற்போது வணங்கா மண் கப்பலில் உள்ள பொருட்களும் பாதிக்கப்பட்ட தமிழர்களைச் சென்றடைவதற்கு மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. நிச்சயம் தமிழர்களிடம் அந்த பொருட்கள் போய்ச் சேரும்.

இலங்கைத் தமிழர்களுக்குத் தற்போது என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து அமைச்சர் தொண்டமான் என்னை வந்து சந்தித்திருக்கிறார்.

ஒரு குழுவை அனுப்பி இலங்கை நிலைமையைப் பார்வையிட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர். மத்திய அரசின் அனுமதி பெற்று உரிய அதிகார அழைப்பின் பேரில்தான் அங்கு செல்ல முடியும் என்று நான் தெரிவித்திருக்கிறேன்.

இது குறித்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அமைச்சர்கள் மூலமாகவும் தெரிவித்திருக்கிறேன். நானே தொலைபேசி மூலமாகவும் பேசியிருக்கிறேன். நிச்சயம் நல்ல தீர்வு கிடைக்கும். எப்போதும், இதே போல தமிழர்களாக ஒற்றுமையாக இருந்து இந்த பிரச்சினைக்கு நாம் தீர்வு காண்போம்" இவ்வாறு கருணாநிதி கூறினார்.

இதையடுத்து பேசிய ஜி.கே. மணி இலங்கை குறித்த தனது கட்சியின் நிலையை விளக்கிக் கூறினார்.

(ந-5)

# நலன்புரி முகாம் மக்கள்...

...வானொலிக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் பசில் ராஜபக்ஷ , பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் அண்மையில் புதுடில்லி சென்றிருந்த போது இது தொடர்பாக இந்திய அரசுக்கு விளக்கிக் கூறியிருந்தார்கள் என அமைச்சர் சமரசிங்க குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் போதுமானதல்ல என இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் விமர்சித்திருந்த நிலையிலேயே அரசாங்கத்திடம் இருந்து இவ்வாறான ஒரு பிரதிபலிப்பு வெளிப்பட்டுள்ளது.

"தமது நாட்டிலேயே அகதிகளாகியுள்ள தமிழர்களின் புனர்வாழ்வு தொடர்பாக இலங்கை அரசாங்கம் இதுவரையில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக என்னால் மகிழ்ச்சியடைய முடியவில்லை" என் சிதம்பரம் குறிப்பிட்டிருந்தார்.

வன்னியில் இடம்பெற்ற போரினால் இடம்பெயர்ந்த சுமார் 3 லட்சம் தமிழர்கள் இப்போது வவுனியாவில் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த அகதிகளுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கும் அரசு இவர்களை மீளக்குடியமர்த்துவதற்கு 180 நாள் திட்டம் ஒன்றை தயாரித்திருப்பதாகவும் தெரிவித்து வருகின்றது. (ந-5)

# 13-வது திருத்தச் சட்ட...

13-வது திருத்தத்தை அமுல்படுத்த முற்பட்டால் அரசாங்கத்திலிருந்து விலகப் போவதாக ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினரும், சுற்றாடல் வளத்துறை அமைச்சருமான பாட்டலே சம்பிக்க ரணவக்க கூறியிருந்தார்.

இதனைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 13-வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் நடவடிக்கைகளையோ அல்லது அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளையோ அமைச்சர் சம்பிக்க ரணவக்க தாமதப்படுத்தக்கூடாது என எச்சரித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

30 வருடங்களாகத் தொடர்ந்து வந்த மோதல்கள் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய தருணம் தோன்றியிருப்பதாக அலரிமாளிகையில் கூடியிருந்த அமைச்சர்கள் சிலரிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் புதுடில்லியிலுள்ள சிலரின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து 13-வது திருத்தத்தை அரசாங்கம் அமுல்படுத்த முயற்சிப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிஷாந்த சிறிவர்ணசிங்க கடந்த திங்கட்கிழமை குற்றஞ்சாட்டியிருந்தார். (ந-5)

# மரண அறிவித்தல்

## இரத்தினம் வைகுந்தவாசன்

(களஞ்சியக் காப்பாளர், பனை அபிவிருத்தி சபை, யாழ்ப்பாணம்.)



அரியாலை கலைமகள் வீதியை பிறப்பிடமாகவும், கொக்குவில் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் வைகுந்தவாசன் 01.07.2009 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கலாபூசணம் V.K.இரத்தினம் (பிரபல கட்டட கலைஞர், சோக சோபித சொர்ண கவிகுயில்) செல்வமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், ரஜிதா (இறுதி யாண்டு மாணவி, நுண்கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), சங்கீதா, மயூரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரஞ்சினிதேவி வரதராஜன் (ஆசிரியை, ஸ்ரீ கலைமகள் முன்பள்ளி), கமலினிதேவி நேத்திரானந்தம், வசந்தவாசன் (நோர்வே), வதனவாசன் (யாழ்ப்பாணம், பல நோக்கு கூட்டுறவு சங்கம்), ராகினி அன்பரசன் ஆகியோரது அன்புச் சகோதரனும்,

வரதராஜன் (முகாமையாளர் NSB), நேத்திரானந்தம் (கிராம அலுவலர், க்ரவெட்டி), நிர்மலா (நோர்வே), கௌரி (ஆசிரியை, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்), அன்பரசன் (அரியாலை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்), குமாரு, மார்க்கண்டு, தம்பிப்பிள்ளை, செல்லம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலக்கம் 47/1, பிறவுண் வீதி, கொக்குவிலில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
இ.வதனவாசன் (சகோதரன்)
(யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)
ஆனந்தன் (பெறா மகன்)
(ஆனந்தன் கராஜ்)

(2901)

# கண்ணீர் அஞ்சலி



பனை அபிவிருத்திச் சபையின் களஞ்சியப் பொறுப்பாளர்

## திரு.இரத்தினம் வைகுந்தவாசன்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் இழப்பினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணியாளர்கள்
பனை அபிவிருத்திச் சபை

(C-2697)

MEGA SALE WITH OFFER
தரம் அதுவே நிரந்தரம்

PC-1
2.2 GHz DUAL CORE (3 YEARS)
ASUS MOTHER BOARD (1 YEAR)
1GB DDR-II (1 YEAR)
250 GB HDD (1 YEAR)
17" VIEW SONIC LCD (3 YEARS)
ATX CASING
KEY BOARD
OPTICAL MOUSE
ASUS DVD WRITER (1 YEAR)
UPS (POWER THREE) (1 YEAR)
51,500/=

PC-2
2.2 GHz DUAL CORE (3 YEARS)
FOXCON G31 MX (1 YEAR)
1GB DDR-II (1 YEAR)
250 GB HDD (1 YEAR)
17" VIEW SONIC LCD (3 YEARS)
ATX CASING
KEY BOARD
OPTICAL MOUSE
ASUS DVD WRITER (1 YEAR)
2 IN 1 CREATIVE WOFFER
UPS (POWER THREE) (1 YEAR)
COMPUTER TABLE
59,000/=

PC-3
2.2 GHz DUAL CORE (3 YEARS)
FOXCON G31 MX (1 YEAR)
1GB DDR-II (1 YEAR)
250 GB HDD (1 YEAR)
16" VIEW SONIC LCD (3 YEARS)
ATX CASING
KEY BOARD
OPTICAL MOUSE
ASUS DVD WRITER (1 YEAR)
UPS (POWER THREE) (1 YEAR)
50,000/=

PC-4
1.6 GHz DUAL CORE (1 YEAR)
INTEL 945 GCLF (1 YEAR)
1 GB DDR-II (1 YEAR)
250 GB HDD (1 YEAR)
16" VIEW SONIC LCD (3 YEARS)
ATX CASING
KEY BOARD
OPTICAL MOUSE
ASUS DVD WRITER (1 YEAR)
UPS (POWER THREE) (1 YEAR)
43,500/=

MARSHA SYSTEMS (Pvt) LTD
74, Kannathiddy Road, Jaffna. T.P:- 021 222 9418
(C-2689)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.